₹10

fmpb

# அறைகூவல்

Volume 51 Issue 5 May 2021

## நான் கர்த்தர், நான் மாறாதவர்...

(மல்கியா 3:6)



# ஆரம்ப வரிகள்...



## மாறாத கர்த்தர்!

மனுக்குலம் மாறுதலுக்குரியது.
பருவக்காலங்களைப்போலவே...
மனிதனின் மனநிலையும், குணமும், தோற்றமும் மாறிக்கொண்டே இருக்கிறது.
பிற சிருஷ்டிகள் அனைத்தும்கூட தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன;
ஆனால்... **சிருஷ்டிகரான கர்த்தரோ மாறாதவராய் இருக்கிறார்** (மல்.3:6)

கர்த்தரின் ஆள்தத்துவம் முழுநிறைவானது; அது நாளுக்குநாள் வளருகிறதாகவோ அல்லது முன்னேறுகிறதாகவோ வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவில்லை.
**கர்த்தர் தமது நிலையிலும், பரிபூரணத்திலும், நோக்கத்திலும், வாக்குத்தத்தங்களிலும் என்றும் மாறாதவராகக் காணப்படுகிறார்.**
கர்த்தரின் தன்மை மாறாததாக முழுமையானதாகக் காணப்படுவதால், அதை மேலும் சிறப்புறவோ அல்லது குறைவடையவோ செய்ய இயலாது.
கர்த்தர் புதியதாக எதையும் கற்றுக்கொள்ளவோ அல்லது வேண்டாததைத் தம்மில் மாற்றிக்கொள்ளவோ வேண்டியதில்லை.
ஏனெனில்... அவர் ஒரு பரிபூரணமான கர்த்தராய், பரிசுத்தராய் எப்பொழுதும் இருக்கிறார்.
கர்த்தர் இன்று இருப்பது போலவே இவ்வுலகைப் படைக்கும்போதும் காணப்பட்டார்.
ஆம்... அவர் எப்பொழுதும் ஒரேவிதமாக தமது எல்லா பரிபூரணத்தோடும், மகிமையோடும் அனைத்து நித்திய காலங்களிலும் காணப்படுவார்

**கர்த்தரை நாம் நமது வெளிப்புறச் செயல்களினால் எவ்விதத்திலும் மாற்றமடையச் செய்ய முடியாது.**
எனவேதான்,
**"நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்"**
என்று இஸ்ரவேல் மக்களுக்கு மோசே மூலம் தமது உடன்படிக்கையின் நாமத்தைப் பறைசாற்றியுள்ளதைப் பார்க்கிறோம்.

அதற்காக... கர்த்தர் தமது மாறாத தன்மையினால் எந்தச் செயலாக்கமுமின்றி காணப்படுகிறார் என்பது அர்த்தமல்ல. கர்த்தர் தமது சிருஷ்டிகளை வனையும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருப்பதை வேதாகமத்தில் நாம் தெளிவாகக் காணலாம் (எபி. 1:3).
இங்கே அவர் தமது சிருஷ்டிகளோடுத் தொடர்புகொள்ளும்போது வெவ்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதோடு, அவர் தமது சிருஷ்டிகளோடு யதார்த்தமான உறவிலிருப்பதையும், தமது மாறாத தன்மைக்கேற்ப பதிலளிப்பதையும் காணலாம்.

நாம் கர்த்தரை மாற்றவே முடியாது, மாறாக... அவரே நம்மை மாற்றுவார்.
நாம் ஜெபித்தும், வேறு எவ்விதத்திலும் அவரது சித்தத்தை மாற்றவே முடியாது;
மாறாக... நமது இருதயங்களை அவரே அவரது சித்தத்திற்கேற்ப மாற்றுகிறார்.
**நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார் (2 தீமோ.2:13). கர்த்தரின் உண்மை நம்முடைய உண்மையைப் பொறுத்தது அல்ல. ஆ! என்ன பெரிய ஆசீர்வாதம்!**

நாம் கர்த்தரைச் சேர்ந்தவர்கள்;
நமது நிலை மற்றும் சூழ்நிலை எவ்வளவு மாறினாலும் அவர் மாறாதவராயிருக்கிறார்.
**உலகளாவிய தொற்றுநோய், பொருளாதார வீழ்ச்சி மற்றும் சாத்தானுடைய சதித்திட்டங்கள் யாவும், கர்த்தர் நம்மீது கொண்டுள்ள ஆளுமையை மாற்றவே முடியாது.**

கர்த்தர்: "நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்;
நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (யோசு.1:5)
என்று உரைக்கிறாரே!

மாறிடும் உலகில் மாறாத கர்த்தரும், அவருடைய வார்த்தையும் ஆவிக்குரிய நங்கூரமாக நமக்கு ஸ்திரத்தன்மையையும்,பாதுகாப்பையும், சகிப்புத்தன்மையையும், பேரமைதியையும் அருளுவதோடு,
இவ்வுலகை எதிர்கொண்டு நாம் அவருடைய ஊழியத்தில் தொடர்ந்து முன்னேறிச் செல்லவும் நமக்குப் பெரிதும் கரம்கொடுக்குமன்றோ!

- JJ. ஹாரிஸ் *(தகவல் தொடர்புத்துறை)*

**“கர்த்தரின் மாறாத தன்மை –
அவரது பரிபூரணநிலைத் தன்மையாகிய
உயிரோட்டத்திலும், குணாதிசயத்திலும், சித்தத்திலும்,
மற்றும் வாக்குத்தத்தத்திலும் அடங்கியுள்ளன.”
– ஜாண் மாக்ஆர்தர்**

**“வாழ்க்கையின் அனைத்து மாறுபாடுகளுக்கும் இடையில், மாறாத ஒருவராக நமது கர்த்தர் நமக்கு இருக்கிறார் என்பது மிகவும் நல்லது; அவருடைய இதயத்தை ஒருபோதும் நம்மால் மாற்ற முடியாது; அவருடைய புருவத்திலுள்ள உரோமத்தில்கூட எந்த மாற்றத்தையும் நம்மால் செய்ய இயலாது.” – C.H. ஸ்பர்ஜன்**

**“நாம் கர்த்தரை மாற்ற முடியாது, கர்த்தர் மாறாதவர். மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமானால், அவை நம்மில்தான் செய்யப்பட வேண்டும்.” – R.C. ஸ்பரௌல்**

**நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். (வெளி.22:13)**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஒரு நற்செய்திப் பணி இயக்கம்.

இயேசுவை ஒருமுறைகூட கேள்விப்பட்டிராதவர்களுக்கு நற்செய்தியை நேரடியாக எடுத்துச் செல்வதே இதன் பிரதான பணி.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது.

சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ**
ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுகாரியதரிசியிடமிருந்து...



*கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்றும் பணியில் எனது அன்பு உடன்பங்குதாரர்களே,*

நமது இயக்கத்தின் பொதுச்செயலாளராக இந்த முதல் கடிதத்தை, இந்திய தேசத்தைச் சுவிசேஷத்தால் சந்திக்கின்ற தரிசனத்துடன், கிறிஸ்துவை அறியாது மாண்டுக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்காக, இரக்க ஆசனத்திலிருக்கிற நமது ஆண்டவரின் பாதத்தில் தினமும் பாரத்துடன் முழங்காலில் நிற்கிற சகோதர, சகோதரிகளுக்கு எழுதுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

## நமது இயக்கத்தின் தனித்துவம்:

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, மிஷனெரிப் பணி வரலாற்றில் ஒரு தனித்துவம் நிறைந்த இயக்கமாகும். இவ்வியக்கத்திற்கு தேவன் கொடுத்த நெறிமுறைகளும் மதிப்பீடுகளும் தனித்துவமானது; இதன் அங்கத்தினர்களிடையே காணப்படுகிற சகோதரத்துவ குடும்ப உறவும் தனித்துவம் நிறைந்தது; இது ஒரு ஜெப இயக்கம் என்பதால் தனித்துவம் நிறைந்தது; இது ஒரு சேனை போன்று செயல்பட்டு வருகிற தன்னார்வ ஜெபக்குழுத்தலைவர்களால் தனித்துவம் நிறைந்தது. தனித்துவம் நிறைந்த தேவனுக்கு ஊழியம் செய்வதற்காக எழுப்பப்பட்டுள்ள இவ்வியக்கத்தின் தனித்துவத்தை நாம் தொடர்ந்து சொல்லிக்கொண்டே போகலாம். தேவன் நமக்காக நிர்ணயித்த இலக்கை நோக்கி நாம் அனைவரும் முன்னேறிச் செல்ல வேண்டுமென அவர் விரும்புகின்றார். ஆகவே, தேவன் அருளிய தரிசனம் மற்றும் மதிப்பீடுகளைக் கிறிஸ்து மீண்டும் வானத்திலிருந்து திரும்பி வருமளவும், கடைசி மனிதன் கல்வாரியை அடையும்வரை நாம் பாதுகாத்து செயல்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

## நமது இயக்கத்தின் ஆசீர்வாதம்:

2020-2021-ம் நிதியாண்டில், நமது இயக்கத்தில் அபரிமிதமான ஆசீர்வாதங்களை தேவன் அருளியுள்ளார். தொற்றுநோய், ஊரடங்கு மற்றும் சமூக அரசியல் சூழ்நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களினால் அநேக சவால்கள் இருந்தபோதிலும், தேவன் மீண்டும் நமது இயக்கத்தின் மீது தமது உண்மை மற்றும் கிருபையை உறுதிப்படுத்தி, அவருடைய இரட்சிப்பிற்குள்ளாகத் திரளான மக்களை வழிநடத்தியுள்ளார். தேவனுடைய வல்லமையான நற்செய்தி, இன்றும் நம்பிக்கையிழந்த மக்களுக்கு நம்பிக்கையை நல்குவதாக அமைந்துள்ளது.

## நம்பிக்கை தரும் சத்தியம்:

இந்த நூற்றாண்டில், கடந்த 100 ஆண்டுகளாக உலகம் கண்டிராத ஒரு பேரழிவை நோவல் கொரோனா வைரஸ் வடிவத்தில் நாம் சந்தித்து வருகிறோம். இந்தத் தொற்றுநோயால் ஏதேனும் ஒருவழியில்கூட பாதிப்புக்குட்படாத ஒரு நாடோ அல்லது தனிப்பட்ட நபரோ இல்லை. இதனால், அநேகர் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்துள்ளனர்; வேலைகளை இழந்துள்ளனர்; ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் இழந்துள்ளனர். கோடிக்கணக்கான நடுத்தரவர்க்க இந்தியர்கள் வறுமையில் தள்ளப்பட்டுள்ளனர். எல்லா இடங்களிலும் ஒருவகையான சோர்வு மற்றும்

நம்பிக்கையற்ற தன்மை இருப்பதைக் காணலாம். இச்சூழ்நிலையில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பண்டிகை மிகவும் அர்த்த முள்ளதாக அமைந்தது எனலாம். ஆம், மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த நமதாண்டவர் இயேசுகிறிஸ்து அவரை நம்புகிற அனைவருக்கும் நித்தியஜீவனை அருளி, இருளின் நடுவே நமக்கு ஒரு பிரகாசமான நம்பிக்கையைத் தருகிறார். மத்தேயு 4:15-ல் சொல்லப்பட்டிருப்பதுபோல, ‘‘இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது.”

## இவ்வுலக ஓட்டத்தை முடித்தவர்களை நினைவுகூருகிறோம்:

நமது மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள், ஜெபக்குழு பொறுப்பாளர்கள் மற்றும் இயக்க அங்கத்தினர்களில் அநேகர் இந்தக் கோர கொரோனாவின் மரணப்பிடிக்குட்பட்டதினால், தனிப்பட்ட முறையிலே நமது இயக்கத்தில் இது ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால், ஜார்க்கண்டிலுள்ள மால்தோ மக்களிடையேயும், பின்னர் மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவிலுள்ள பாவ்ரா இனமக்களிடையேயும் கிறிஸ்துவுக்காக மிஷனெரிப்பணியாற்றிய பாவ்ரி வேதாகம மொழிப்பெயர்ப்பாளரான நமது சகோ. இம்மானுவேல் இறைபிச்சை அவர்களையும், அநேக ஜெபக்குழு பொறுப்பாளர்கள் மற்றும் அங்கத்தினர்களையும் தேவன் தமது ராஜ்யத்திற்கு அழைத்துச் சென்று இருக்கிறார். இனி நித்தியவீட்டில் இயேசுகிறிஸ்துவோடு அவர்களைச் சந்திக்கும்வரை இந்த உலகில் நமக்கு அன்பான இவர்களை நாம் இழந்து இருக்கிறோம். திடீரென சற்றும் எதிர்பாராத நிலையில் தங்களுக்கு அன்பானவர்களை இழக்கக்கொடுத்திருக்கிற இந்த அன்புக்குரிய குடும்பங்களை நாம் நமது ஜெபத்தில் நினைவுகூருவோம். தேவனின் அளவற்ற கிருபை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்கள் மீதும், உலகிலுள்ள அனைத்து மக்கள் மீதும் காணப்பட தொடர்ந்து ஜெபிப்போம்.

கொரோனா நெறிமுறைகளைப் பின்பற்றி, இந்தச் சாதகமற்ற காலங்களில் தாங்கள் அனைவரும் மிகப் பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கொரோனாவின் சிறிய அறிகுறி இருந்தாலும், மருத்துவ பரிசோதனை செய்துகொள்வது மிகவும் முக்கியம். தேவனு டைய அடைக்கலமான செட்டைகளினால் மூடுவதற்காக நமது அனைத்து மிஷனெரிகள், அங்கத்தினர்கள் மற்றும் அனைவரையும் அவருடைய கிருபையின் ஆசனத்திற்கு முன்பதாகக் கொண்டு வருவோம்.

வரவிருக்கும் நாட்கள் மிகவும் கடினமான தாகத் தோன்றினாலும், நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். அவர் எல்லா சூழ்நிலைகளிலும், நமது வாழ்க்கையில் தமது நோக்கத்தை நிறைவேற்ற போது மானவர். 1 கொரிந்தியர் 1:5-ல் புனித பவுல் கூறியிருப்பதுபோல, “நீங்கள் இயேசுகிறிஸ்து வுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும், சம்பூரண முள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறீர்கள்.”

உங்கள் அனைவரையும் நாங்கள் எங்களது அனுதின ஜெபங்களில் நினைவுகூருகிறோம். நாம் ஒன்றிணைந்து நமது தேசத்தைச் சுவிசேஷத்தால் சந்திப்போம்.

தேவ ஊழியத்தில் தங்கள் சகஊழியன்,



அருள்திரு. S. ஜாண் பெர்லின்

**குறிப்பு:** *நமது மிஷனெரி சகோ. சாம் ஜெபகுமார், பொதுச்செயலாளரின் தனிப்பட்ட செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். எந்த வொரு சந்தர்ப்பத்திலும், தாங்கள் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியாவிட்டால், சகோ. சாம் ஜெபகுமார் அவர்களை அவருடைய அலைபேசி எண் 9444228544-ல் தொடர்பு கொள்ளவும்.*




மிகவும் பிரதானமான மற்றும் ஆழமான வலிமையான வார்த்தை, 'நான் கர்த்தர் – மாறாதவர்' என்பது. இது கர்த்தராகிய தேவனின் சத்தியமான வார்த்தை! கர்த்தருடைய குணத்தின் தன்மையை வலியுறுத்திச் சொல்லப்பட்டுள்ள வார்த்தை – 'கர்த்தர் மாறாதவர்.'

மாறிக்கொண்டேயிருக்கும் இயற்கையின் மாற்றங்கள், நிலையில்லா மனித வாழ்க்கை, நம்பிக்கையில்லாத எதிர்காலப் பார்வை, மாறக்கூடிய மனித பண்புகள், மாற்றம் பெற்றுக்கொண்டுவரும் கால சூழ்நிலைகள், பொருளாதார நிலையற்ற தன்மை, மாறுதல் ஏற்படுத்தக்கூடிய கொள்கைகள் –இவைகளின் மத்தியில் நமது கர்த்தராகிய தேவன் மாறாதவர்!

கர்த்தரின் வார்த்தை நமக்கு அளிக்கும் உத்தரவாதம் – "கர்த்தர் மாறாதவர்." இதைக்குறித்து பரிசுத்த வேதாகமத்தில் காணக்கூடிய மிக முக்கியமான மூன்று உண்மைகள்:

1. இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் (எபி.13:8)
2. நம்பிக்கையின் அஸ்திபாரமான இரண்டு மாறாத பிரமாணங்கள் (எபி.6:18)
3. தேவனுடைய கிருபைவரங்களும், அவர் நம்மை அழைத்த அழைப்பும் மாறாதவைகள் (ரோ.11:29)

மாறாத இந்த ஆழ்ந்த உண்மை செய்திகள், நமக்கு நிலையான மெய்ப்பொருளை அறியும் இணக்கமான மனதையும் புரிந்துகொள்ளும் ஆவியின் வல்லமையையும் பகிர்ந்தளிக்கட்டும்.

## 1. இயேசுகிறிஸ்து மாறாதவர் (எபி.13:8)

அசைவில்லாத ராஜ்யத்தின் (எபி.12:28) அதிபதியானவர், இயேசுகிறிஸ்து. அவர் **இயற்கையின் மேல்** செலுத்தும் அதிகாரம் மாறுவதில்லை (மாற்கு 4:39); அவர் சமுத்திரங்களின் மேலும், ஆழமான அலைகளுடைய கொந்தளிப்பின் மும்முரத்தின் வலிமையின் மேலும் அதிகாரம் பெற்றவர் (சங்.65:7; 89:9; 104:6–7).

அவர் **இருளின் ஆதிக்கத்தின் மேல்** அதிகாரம் கொண்டவர் (கொலோ.1:13). தேவன் (இயேசு) ஒளியாயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருளில்லை (1யோ.1:5).

மேலும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **பாவத்தின் மேல்** வெற்றி பெற்று, அதன் தண்டனையைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு மனுக்குலத்திற்கு விடுதலையைத் தரும் அதிகாரம் பெற்று மாறாதவராயிருக்கிறார் (ரோ.6:23; யோ.3:16; 1:12; 1 யோ.1:9).

அடுத்தப்படியாக, **வியாதியின் மேல் ஜெயத்தைப் பெற்று,** சுகமளிக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மாறாதவராயிருக்கிறார் (ஏசா.53:5; மத்.8:16–17; 1 பேதுரு 2:24; அப்.10:38; ரோ.8:11)

மிகவும் விசேஷமாக, **பயம் மற்றும் கவலையின் மேல் வல்லமை பெற்று,** தம்மை நம்புகின்ற யாவருக்கும் இயேசுகிறிஸ்து மாறாதவராயிருக்கிறார் (பிலி.4: 6-7; யோ.14:27; மத்.6:34; 1 பேதுரு 5:6-7; லூக்.12:22-26).

## 2. மாறாத இரண்டு பிரமாணங்கள் (எபி.6:18)

மாறாத இந்த இரண்டு பிரமாணங்களின் நங்கூரமாக இயேசு இருக்கின்றார். கர்த்தரின் வாக்குத்தத்தமும் அவரின் உடன்படிக்கையும் மாறாத இரண்டு பிரமாணங்களாக இருக்கிறது (எபி.6:14&17). இந்த இரண்டு பிரமாணங்களின் நம்பிக்கையாக இயேசு கிறிஸ்து இருக்கின்றார். இவர் பிரதான ஆசாரியனாக தேவனின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் நமக்காகப் பிரவேசித்து, பரிந்து பேசும் நபராகக் காணப்படுகின்றார்.

ஆபிரகாமின் வாழ்க்கையில், இந்த தேவனின் வாக்குத்தத்தமும் (ஆதி.12:1-2), உடன்படிக்கையும் (ஆதி.17:2) மகா வல்லமையாகச் செயல்பட்டது.

நமது இயக்கத்தின் தீர்க்கப்பார்வையின் வெளிப்பாடுகளிலே, தேவனின் வாக்குத்தத்தமும் உடன்படிக்கையும், அநேக மொழி பேசும் வேறுப்பட்ட கலாச்சார மக்களை அசைவில்லாத அவருடைய இராஜ்யத்தின் பிரஜைகளாக மற்றும் பிரதிநிதிகளாக மாற்றியிருக்கிறது. பணித்தள ஊழியர்களுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள், சுவிசேஷத்திற்கான வாசலைத் திறந்தது. நிறைவான புதுவாழ்வின் இணைப்பில் அவருடைய சந்ததிகளாக மாற்றியது. தேவ ராஜ்யத்தின் மேன்மையைப் புகழ்பாடும் ஆராதனைக்குழுக்கள் மற்றும் தேவன் தங்கித் தாபரிக்கும் வாசஸ்தலமான ஆலயங்கள் எழும்பவும் கிரியைகளை நடப்பித்தது.

தேவனோடு தனிமனித உறவின் உடன்படிக்கையும், இணைந்து செயலாற்றும் ஜெபக்குழுக்களின் சங்கமமும் ஜெபத் தூபத்தைப் பிரவாகித்து எழும்பச் செய்தது. அனுப்புவோர் மற்றும் தாங்குவோர் என்கின்ற கண் எட்டும் எல்லையைக் கடந்து, கரைந்து செயலாற்றுவோம் என்னும் முனைப்பின் உடன்படிக்கை - ஜெபக்குழுக்களைத் தூண்டி எழுப்புதலை ஏற்படுத்தி, கண்ணுக்கு எட்டாத தரிசனங்களைப் பெறச் செய்தது.

இரண்டு விசேஷித்த அடிவான மற்றும் தொடுவானங்களுடைய எல்லைகளின் விஸ்தார மதிப்பின் மகிமையாக இருக்கின்ற மாறாத இயேசுகிறிஸ்துவே, இந்த இயக்கத்தின் தலைவராக மாட்சிமையோடு அரசாட்சி செய்கின்றார்.

தெற்காசிய நாடுகளின் ஊழிய ஸ்தாபனங்களுடைய பணிகளின் எடுத்துக்காட்டாக விளங்கும் இந்த இயக்கத்தின் அஸ்திபாரம் மற்றும் நம்பிக்கை, நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே - அவர் மாறாதவர்!

## 3. தேவனின் கிருபைவரங்களும் - அவர் அழைத்த அழைப்பும் மாறாதவைகள் (ரோ.11:29)

நமது முற்பிதாக்களின் தேவன், தமது வார்த்தையில், வாக்குத்தத்தத்தில் மற்றும் வல்லமையில் என்றும் மாறாதவராகயிருக்கின்றார். தேவனின் கிருபை, தமது இரட்சிப்பின் திட்டத்தில் யூதர்களுக்கு மட்டுமல்ல, புறஜாதியாருக்கும் சுவிசேஷ வாசல் திறக்கப்பட வேண்டும் என்பதே! அதற்காக மோசே, ஆபிரகாம், யாக்கோபு, யோசுவா போன்றவர்களை அழைத்த தேவன்- நெகேமியா, எஸ்தர், எஸ்றா போன்றவர்களையும் எழும்பப் பண்ணினார். எலியா, எலிசா, ஏசாயா, எசேக்கியேல் மற்றும் தானியேல் போன்ற தீர்க்கதரிசிகள்

மூலமாக தேவத்திட்டத்தின் மகத்துவத்தை அழகாக வெளிப்படச் செய்தார்.

பழைய ஏற்பாட்டின் இந்தக் கிருபையின் வரமும், அவர் அழைத்த அழைப்பும் மாறாதவைகளே. இதனைப் புதிய ஏற்பாட்டில், நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை மையமாக அமைத்து பேதுரு, யாக்கோபு, பவுல், தீமோத்தேயு மற்றும் யோவான் போன்றவர்களைப் பெயர் சொல்லி அழைத்து தமது தேவத்திட்டத்தின் வலிமையை மேலும் சிறப்பாக வெளிப்படச் செய்தார்.

சென்ற நூற்றாண்டுகளின் சரித்திரம், நமக்குச் சொல்லித்தரும் பாடங்கள்: அநேக தேவ ஊழியர்களின் தியாகமான அர்ப்பணிப்பின் வாழ்க்கை – உலகத்தின் பல பகுதிகளைச் சுவிசேஷ மயமாக்கும் அற்புதத்தைக் காணச் செய்திருக்கிறது.

நமது இயக்கத்தின் சிறப்பான ஊழியப் பாதையின் தரிசனங்கள், தேவனின் கிருபைவரங்களும் அநேக ஊழியர்களை அவர் அழைத்த அழைப்புகளும் ‘அவர் மாறாதவர்!’ என்பதை நமக்கு ஆணித் தரமாக வெளிக்காட்டுகிறது.

சுமார் 50–க்கும் அதிகமான தேவ ஊழியர் கள் இந்த இயக்கத்தின் கோதுமை மணி களாக தேவ ராஜ்யத்தின் பாத்திரவான் களாகவும், இத்தேவ ஊழிய உடன் படிக்கையின் பங்காளர்களாக அநேக ஜெபக்குழு தலைவர்களும் தேவ ராஜ்ய மகிமைக்குள் பிரவேசித்திருக்கிறார்கள்.

ஆம்! அற்புதங்கள், அடையாளங்கள், ஆச்சரியமான செயல்பாடுகள், எதிர்ப்புகள், நஷ்டங்கள் மற்றும் நன்மையான பாதை ஆகியவைகளில் இம்மட்டும் நம்மைக் காத்தவர்– **மாறாதவர்!**

இனிவரும் எதிர்நோக்கியுள்ள நாட்களின் நிலையற்ற சூழ்நிலைகளில், சாதகமற்ற நடைமுறைகளில், தேவ எச்சரிப்பின் கடைசி நாட்களின் அடையாளங்களான யுத்தம், கலவரம், எதிர்ப்புகள், பூமி அதிர்ச்சிகள், வெள்ளம், கொள்ளைநோய் மற்றும் மாறிவரும் வானத்தின் அடையாளங்களின் மத்தியில் நமக்கு ஏற்படும் மிகப்பெரிய கேள்வி – “நமது தேவன் இயேசு இன்றும் மாறாதவராயிருக்கின்றாரா?” என்பது. ஆம்! அதை மேலும் வலுவான நங்கூரமாக ஊர்ஜிதப்படுத்த பரிசுத்த வேதாகமத்தி லிருந்து இன்னும் ஒரு சில பகுதிகள் தங்களின் கவனத்திற்கு,

## திருமறையின் சாட்சியின் மாறாத தேவன்

பிரியமானவர்களே, வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் அவர் வார்த்தைகள் ஒழிந்துபோவதில்லை (மத்.24:35). ராஜ் யத்தின் இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்கு முள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும் (மத்.24:14). அவர் நமக்குச் சொல்லியுள்ள ஆணித்தரமான வார்த்தை: “இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் (மத்.28:20) என்பதே.

அவர் மாறவேமாட்டார்: அவர் மாறுவது இல்லை. அவர் வார்த்தை மாறுவது இல்லை. அவர் உடன்படிக்கை மாற்றப்படுவது இல் லை. அவருடைய கிருபை மாறாது. அவரின் அழைப்பும் மாறாதது.

**ஆம்!**
**கர்த்தர் என்றென்றும் மாறாதவர்!**

- வானத்து நட்சத்திரங்களின் எண்ணிக்கைக்கு மேலாக இஸ்ரவேலை வர்த்திக்கப் பண்ணியவர் – மாறாதவர்!
- செங்கடலை இரண்டாகப் பிளந்தவர் – மாறாதவர்!

✦ யோர்தானின் பிரவாகத்தைக் குவியலாக நிற்கச் செய்தவர் – மாறாதவர்!

✦ இஸ்ரவேலை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்தவர் – மாறாதவர்!

✦ காற்றையும் கடலையும் அமைதியாக்கியவர் – மாறாதவர்!

✦ குருடனின் கண்களைத் திறந்தவர் – மாறாதவர்!

✦ செவிடனைக் கேட்கச் செய்தவர் – மாறாதவர்!

✦ மரித்தவனை உயிரோடு எழுப்பினவர் – மாறாதவர்!

✦ அதிசயங்களை / அற்புதங்களைச் செய்தவர் – மாறாதவர்!

✦ நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தவர் – மாறாதவர்!

✦ மறுபடியும் இரண்டாம் முறையாக ராஜாதி ராஜாவாக, நியாயாதிபதியாக வரப்போகின்றவர் – மாறாதவர்!

## நமது இயக்கத்தின் மாறாத ஆண்டவர்

நமது இயக்கத்தை ...

* ஜெபிக்கும் இயக்கமாக உருவாக்கியவர் – மாறாதவர்!
* ஜெபக்குழுக்களை நிர்மாணித்தவர் – மாறாதவர்!
* தியாகமான தலைவர்களை, அங்கத்தினர்களைத் தந்தவர் – மாறாதவர்!
* கூரிய தரிசன தொலைநோக்குத் திட்டங்களைத் தந்தவர் – மாறாதவர்!
* பணித்தள ஊழியர்களைக் கொடுத்தவர் – மாறாதவர்!
* பணித்தளங்களை அதின் எல்லைகளை விஸ்தாரமாக்கினவர் – மாறாதவர்!
* பல்வேறு மொழி பேசும் ஜாதிமக்களைத் தந்தவர் –மாறாதவர்!

ஆம், இந்த இயக்கத்தின் “இயக்கமாக” இருக்கும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எந்நாளும் மாறாதவரே!

## மாறாத கேள்விகள்

இறுதியாக, நாம் ...

* நமது தரிசனத்தில் மாறாதவர்களாக இருக்கின்றோமா?
* நமது தியாகத்தின் அர்ப்பணிப்பில் மாறாதவர்களாக இருக்கின்றோமா?
* நமது ஜெபவாழ்க்கையில் மாறாதவர்களாக இருக்கின்றோமா?
* நமது தேவனோடுள்ள அன்பின் உடன்படிக்கையில் மாறாதவர்களாக இருக்கின்றோமா?
* நமது கண்களிலிருந்து ஆத்தும பாரத்தினாலுண்டாகும் கண்ணீர் துளிகள் மாறாமல் இருக்கின்றதா?
* நமது நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவின் ஆதிநாட்களின் தரிசன மனமும், ஜெபவாழ்க்கையும், தியாகமான ஈகையும், தெய்வீக அன்பின் உறவும், தேச தரிசனமும் – மாறாமல் இருக்கின்றதா?

நமது பதில் என்ன ?

சிந்திப்போம்! சீர்பட்டுச் செயல்படுவோம்!!

**‘நான் கர்த்தர் – நான் மாறாதவர்!’**

*– அருள்திரு. பிரபாகர சாரதி, FMPB – தலைமை செயலக செயலாளர்.*



**அருள்திரு. G. இம்மானுவேல் இறைபிச்சை**

**அவர்களின் நல்வாழ்விற்காக தேவனைத் துதிக்கிறோம்!**

அருள்திரு. இம்மானுவேல் இறைபிச்சை அவர்கள், நல்லதொரு மிஷனெரி வரலாற்று பின்னணியத்தைக் கொண்டவர். இவர் பிறந்த திருவண்ணாமலை மண்ணில், பதினேழாம் நூற்றாண்டின் முற் பகுதியில் டேனிஷ் மிஷனெரிகள் மிஷனெரிப்பணியாற்றி பல்லாயிரக் கணக்கான மக்களைக் கிறிஸ்துவண்டை கொண்டு வந்தார்கள். குறிப்பாக 1706-ம் ஆண்டில் தரங்கம்பாடியில் அடியெடுத்து வைத்த மிஷனெரிகளான பர்தொலொமேயு சீகன்பால்க் மற்றும் ஹென்றி புளுச்சோ, அநேக லூத்தரன் திருச்சபைகளை உருவாக்கினதோடு, வேதாகமத்தையும் தமிழில் மொழிப்பெயர்த்து வழங்கினர். அவர்களைத் தொடர்ந்து வந்த மிஷனெரி ஓச், தென்ஆற்காடு மாவட்டம் என்று முன்னர் பெயர்பெற்ற பகுதிகளுக்குட்பட்ட திருவண்ணாமலையில் டேனிஷ் திருச் சபைகளை உருவாக்கினார். இவர் 1963-ம் ஆண்டு மேல்பட்டம்பாக்கத்தில் ஒரு தேவாலயத்தையும், சில பள்ளிகளையும் தொடங்கினார். அவ்வாறு உருவாக்கப் பட்ட மிகவும் பிரபலமான பள்ளிதான் திருவண்ணாமலையிலுள்ள டேனிஷ் மிஷன் பள்ளியும், 1914-ம் ஆண்டு நிறுவப்பட்ட கர்மேல் திருச்சபையுமாகும். 1951-ம் ஆண்டு புதிய அரசியலமைப்பு அமலாக்க மானப் பின்னர், சுதேச தலைமைத்துவம் உருவாகி, அங்குள்ள தேவாலயங்கள் “ஆற்காடு லூத்தரன் திருச்சபைகள்” என்று அழைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக டேனிஷ் மிஷன் மூலமாக உருவான திருச்சபையின் முக்கிய அங்க மாகக் காணப்பட்டவர்தான், அருள்திரு. இம்மானுவேல் இறைபிச்சை அவர்களின் தகப்பனாராகிய திரு. ஜார்ஜ் அதிசயசீலன் அவர்கள். இவர் இதே டேனிஷ் மிஷனெரிப் பள்ளியில் கல்வி கற்றுத்தேர்ந்து, நக்காம் பாடி ஊரிலுள்ள டேனிஷ் நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். இவரது மனைவி திருமதி. வசந்தா அம்மையாரும் ஓர் ஆசிரியையே.

## இளமைப் பருவம்:

சகோ. இம்மானுவேல் இறைபிச்சை அவர்கள், திரு. ஜார்ஜ் அதிசயசீலன் மற்றும் திருமதி. வசந்தா தம்பதியரின் மூத்த தவப்புதல்வனாக 1968 டிசம்பர் 11-ம் தேதி பிறந்தார். இவருக்கு அன்னாள் அருமை செல்வி, சாரா ஜெபசீலி, எலிசபெத் எழில் செல்வி என்ற மூன்று சகோதரிகளும், எபநேசர் இறை அமிர்தம் என்ற கடைசி தம்பியும் உண்டு. இவர்கள் அனைவரும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு, தற்போது தனித்தனியே குடும்பமாக வாழ்கிறார்கள். இவரது தம்பி அருள்திரு. எபநேசர் இறை அமிர்தம் அவர்கள், ஆற்காடு லூத்தரன் திருச்சபை குருவானவராகப் பணியாற்றி வருகிறார். இவர்களது பெற்றோர் மிகவும் எளிமையானவர்கள்; தேவனுக்குப் பயந்து நடக்கிறவர்கள்; அதோடு ஆற்காடு லூத்தரன் திருச்சபை ஊழியங்களிலும், கல்வித்துறையிலும் தங்களது பங்களிப்பைப் பல்வேறு விதங்களில் சிறப்புடன் அளித்த

வர்கள். இவரது தகப்பனார் திரு. ஜார்ஜ் அவர்கள், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் திருவண்ணாமலை மாவட்ட கௌரவ விரிவுப்பணிச் செயலாளராகச் செயல்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களது பெற்றோர், தங்களைப் போலவே, தங்களது பிள்ளைகளும் கிறிஸ்துவின் அடிச்சுவற்றில் நடக்க மிகவும் ஜெபத்தோடும், தியாகத் தோடும் தேவனைச் சார்ந்தே அவர்களை வளர்த்து வந்தார்கள்.

## ஆவிக்குரிய வாழ்வு:

சகோ. இம்மானுவேல் இறைபிச்சை சிறுவயதி லிருந்தே ஒழுக்கம், பொறுப்பு, பொறுமை, தெய்வபயம், ஜெபம், வேதவாசிப்பு மற்றும் ஆலய ஊழியங்களில் நல்ஈடுபாடு கொண்டவராகக் காணப்பட்டார். இவர் தனது பள்ளிப்படிப்பைத் திருவண்ணாமலை டேனிஷ் மிஷன் மேல்நிலைப்பள்ளியில் படித்து முடித்தார். இவருக்குத் தனது பள்ளியிறுதி கோடைகால விடுமுறையின்போது, தனது 'தகப்பனாரோடு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தமிழ்நாடு மாநிலமுகாமில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஒருமுறை கிட்டியது. 1986-ம் ஆண்டில் இம்மாநில முகாமின்போது, அருள்திரு. அறிவர். சாம் கமலேசன் அவர்களுடைய தேவசெய்தி யால் இவர் தொடப்பட்டு, கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராகவும், ஆண்ட வராகவும் ஏற்றுக்கொண்டார். மேலும் வருடந்தோறும் இம்மாநில முகாம்களில் கலந்து கொள்வதோடு, தங்களது திருச்சபை வாலிபர் கூடுகைகளிலும் கலந்து கொண்டு தனது ஆவிக்குரிய ஜீவியத்தை வளர்த்துக் கொண்டார்.

## மிஷனெரி ஊழிய அர்ப்பணிப்பு:

சகோ. இம்மானுவேல் இறைபிச்சை அவர்கள், தனது இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகளைக் கணித வியலில் (B.Sc., & M.Sc., in Mathematics) திருப்பத்தூரிலுள்ள தூய இருதய கல்லூரி யில் பயின்றார். இவர் தனது கல்லூரி நாட்களில் அருட்பணி மாணவர் இயக்கத் துடன் (Evangelical Union) சேர்ந்து, வேத ஆராய்ச்சிக் கூட்டங்களிலும் மற்றும் ஜெபக்கூடுகைகளிலும் தவறாமல் கலந்து கொண்டு, தனது ஆவிக்குரிய வாழ்வில் மென்மேலும் வளர்ந்து வந்தார். இதற் கிடையில் வேலூர் மாவட்டம், புத்துப்பட்டி யிலுள்ள பாலாறு அணைக்கட்டில் வைத்து நடைபெற்ற 5 நாட்கள் இளைஞர் பயிற்சி முகாமில் இவர் கலந்து கொண்டது, இவருடைய வாழ்வின் திருப்புமுனையாக அமைந்தது. அம்முகாமை அருள்திரு. அனந்தசேகர், திரு. ரிச்சர்ட் சம்பத் குமார் மற்றும் மறைந்த திரு. நெல்சன் ஆகியோர் மிகச்சிறப்பாக ஒழுங்கு செய்தி ருந்தனர். அம்முகாமின் சிறப்புச்செய்தி யாளர் சகோ. ஸ்டேன்லி பிரின்ஸ் ஆவார். அம்முகாமில்தான் இவர் தன்னை முழுநேர மிஷனெரிப்பணிக்கென அர்ப்பணித்தார்.

## வேதாகம மொழிப்பெயர்ப்புப் பணிக்கான அழைப்பும் ஊழியமும்:




சகோ. இம்மானுவேல் இறைபிச்சை அவர்களுக்கு 1990-ஆம் ஆண்டு அருட்பணி மாணவர் இயக்கம் நடத்திய வேதாகம மொழிப் பெயர்ப்பு கருத்தரங்கில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத் தது. அக்கருத்தரங்கில் வேதாகம மொழிப்பெயர்ப்பு ஊழியத்தின் முக்கியத்து வத்தை உணர்ந்து, அதில் இவர் தனது ஜெபத்தையும் ஆர்வத்தையும் வளர்த்து வந்தார். ஒருநாள் குடும்ப ஜெபத்தின்போது, இவரது தந்தை திரு. ஜார்ஜ் அவர்கள், இவரிடம், 'உன் படிப்பு முடிந்துவிட்டதே, இனி நீ என்ன செய்யப் போகிறாய்? என்று கேட்கவே, அதற்கு இவர் 'மிஷனெரியாகச் செல்ல விரும்புவதாகத் தெரிவித்தார்.' அதைக்

கேட்ட இவரது தந்தை, 'நீ ஏன் ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளராகக் கூடாது?' எனக் கேட்கவே, அக்கேள்வியை இவர் ஏற்கனவே வேதாகம மொழிப்பெயர்ப்புப்பணியில் கொண்டிருந்த ஆர்வத்திற்கு தன் தந்தை மூலம் இவருக்குக் கிடைத்த அழைப்பாக அதை உறுதிசெய்துக் கொண்டார். உடனே, இவரது பெற்றோரும் உடன்பிறப்புகளும் முழுமனதுடன் கண்ணீர் மல்க இவரை மிஷனெரிப்பணிக்கென அனுப்பி வைத்தார்கள். அதன்விளைவாக 1991 நவம்பர் 18-ம் தேதி, இவர் தனது 24-வது வயதில் நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெரியாக இணைந்து, சேலத்திலுள்ள பெத்தேலில் மிஷனெரிப்பணிக்கான பயிற்சியைப் பெற்றார்; பயிற்சியை முடித்தப்பின், ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள மால்தோ மற்றும் சந்தால் இனமக்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்காக அனுப்பப்பட்டார். அங்கு இவர் சுமார் 6 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றினார். பின்னர் இவர் வடஇவாஞ்சலிக்கல் லூத்தரன் திருச்சபை (NELC) அமைப்பால் குருவானவராக அபிஷேகம் செய்யப்பட்டார்.

## குடும்ப வாழ்வும் ஊழியமும்:

சகோ. இம்மானுவேல் இறைபிச்சை அவர்கள், 1997 ஜூன் 17-ம் தேதி சகோதரி. ஜேன் அமுதா கிருபை அவர்களைத் திருமணம் செய்தார். இவர்கள் இருவரும் மகாராஷ்டிரா மற்றும் மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழும் பாவ்ரா இனமக்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்காக அனுப்பப்பட்டனர். இவர்கள் எழுத்து வடிவமற்ற பாவ்ரா மொழியில் வேதாகமத்தை மொழிப்பெயர்க்கும் பணியில் ஈடுபட வேண்டுமென ஜெபித்துத் தீர்மானித்தனர். நமது இயக்கத்தின் நிர்வாகமும் அதற்குச் சம்மதித்து இவர்களை ஊக்கப்படுத்தவே, இவர்கள் இருவரும் சஹானா போய்டி என்கிற ஒரு குக்கிராமத்தில் தங்கி, பாவ்ரா



மொழியை அம்மக்களிடமிருந்து கற்றறிந்தனர். அதோடு மொழிப்பெயர்ப்புப் பணிக்கான பயிற்சியையும் யுக்திகளையும் அகிலஉலக மொழிப்பெயர்ப்பு வல்லுனர்களிடமிருந்து திறம்பட கற்றுக்கொண்டனர். இதன் விளைவாக பாவ்ரா இன மக்கள் மொழியில் வேதாகம மொழிப்பெயர்ப்புப் பணி ஆரம்பித்தது. இதற்கிடையில், மகாராஷ்டிராவிலுள்ள காந்தேஷ் பிராந்தியத்திலிருந்து, சித்தாரா பகுதியை மற்றுமொரு பிராந்தியமாகப் பிரித்தபோது, அதன் பிராந்தியச் செயலாளராக சகோ. இம்மானுவேல் அவர்கள், அனைத்து மிஷனெரிகள் மற்றும் ஊழியர்களால் முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டார். சுமார் ஆறு ஆண்டுகள் இப்பொறுப்பிலிருந்துக் கொண்டே, 1998-ம் ஆண்டு முதல் பாவ்ரா மொழியில் இவர் தனது மனைவியோடு சேர்ந்து வேதாகமத்தை மொழிப்பெயர்த்து வந்தார். புதிய ஏற்பாடு முழுவதையும் பாவ்ரா மொழியில் மொழிப்பெயர்த்து, அதை 2019-ம் ஆண்டு FMPB தமிழ்நாடு மாநில முகாமில் தேவநாம மகிமைக்காக வெளியிட தேவன் இவர்களுக்கு உதவி செய்தார்.

தேவன் இத்தம்பதியரை மூன்று பெண் பிள்ளைகளால் ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகள் குமாரி. இவாஞ்சலின் இரட்சண்ய மலர் (வயது 24), தொழிற்சார் மருத்துவ சிகிட்சை பட்டப்படிப்பை (Bachelor of Occupational Therapy) முடித்து, தற்போது திருமணத்திற்கு

ஆயத்தப்பட்டு வருகிறார். இரண்டாவது மகள் குமாரி. நளதம் நற்செய்தி மலர் (வயது 21) கண் சம்பந்தப்பட்ட துணை மருத்துவப்பட்டப் (Optometry) படிப்பை எஸ். ஆர். எம். கல்லூரியிலும், மூன்றாவது மகள் குமாரி. கிளாடிஸ் கிருபை மலர் (வயது 16) 12-ம் வகுப்பைச் சென்னையிலுள்ள எபநேசர் மேல்நிலைப்பள்ளியிலும் பயின்று வருகிறார்கள்.

சகோ. இம்மானுவேல் இறைபிச்சை அவர்கள், தங்கள் பெற்றோரைப் போன்றே மிகவும் சாந்தகுணமுள்ளவரும், மென்மை யான புன்முறுவலும் கொண்டவர். இவர் மிகவும் ஆழ்ந்த சிந்தனையாளர். எளிமை யான வாழ்க்கைமுறையைக் கடைபிடித்த இவர், தனது உடன்மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் தங்களால் கிறிஸ்து வண்டை வழிநடத்தப்பட்ட விசுவாசிகள் மத்தி யில் மிகவும் முன்மாதிரியான வாழ்க்கையை நடத்தினார். இவர் எந்தப் பாகுபாடும் காட்டாது, அன்பின் மூலம் எவரையும் வெல்ல முடியும் என்பதைத் தனது வாழ்வின் மூலம் நிரூபித்தார். இவருடைய திருச்சபை விசுவாசிகளில் அநேகர் இவர் மீது கொண்ட அன்பினால், இவரை அவர்கள் மொழியில் 'அப்பா, பெரியப்பா, மாமா!' என்றும் அழைப்பதுண்டு. தங்களது ஊழியத்தொடர் பிலுள்ளவர்கள் யாராவது பணத்தேவை யிலோ அல்லது வேறு ஏதாவது தேவையிலோ வைக்கப்பட்டிருந்தால், அவர்கள் கேட்காம லேயே தியாகத்துடன் உதவிசெய்யும் குணம் கொண்டவராகக் காணப்பட்டார். இவரது தனிப்பட்ட உறவினால் அநேகர் தங்கள் சொந்த மற்றும் ஊழியப் பிரச்சனைகளை இவரிடம் சற்றும் தயங்காமல் பகர்ந்து ஜெபித்து ஆலோசனைப்பெற்று வந்தனர். இவர் ஒருபோதும் தனது வாழ்விலும் ஊழியத்திலும் வேதாகம நெறிமுறைகளை விட்டுக்கொடுத்ததில்லை. பிரச்சனைகளைக் கையாளும்போது இவர் அடிக்கடி வேதாகம சத்தியங்களையும், மிஷனெரித்தலைவர்கள் விட்டுச்சென்றுள்ள ஊழிய மரபுகளையும் மேற்கோள்காட்டி, அதற்குப் பதில்காண விழைவார். தன்னலமற்ற அன்பும், களங்கமற்ற வாழ்வும், ஒற்றுமையைப் பேணிக்காப்பதும் இவருடைய அடிப்படை குணாதிசயங்களாகக் காணப்பட்டது. படிப்பறிவில்லாத இளம் விசுவாசிகளுக்குச் சுவிசேஷத்தைக் 'கதை சொல்லுதல்' மூல மாகத் தெளிவுற எடுத்துரைக்கும் முறையை ஊழியத்தில் அறிமுகப்படுத்தியவர், இவரே. பாவ்ரா இனமக்களின் சமுதாயம் மேம் படுவதற்காக, தங்களது விசுவாசிகளின் குழந்தைகளைச் சென்னையிலுள்ள எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிப் படிக்க வைக்கவும் இவர் பல விதங்களில் உதவினார்.

## வாழ்வின் இறுதி காலம்:

சகோ. இம்மானுவேல் இறைபிச்சை அவர் களுக்குக் கடந்த 2021 மார்ச் மாதம் கடைசி வாரத்தில் திடீரென காய்ச்சல் மற்றும் சளித்தொல்லை ஏற்பட்டது. எனவே, ஏப்ரல் மாதம் 4-ம் தேதி மகாராஷ்டிராவிலுள்ள நந்தூர்பார் என்கிற பகுதிக்குச் சிகிட்சைக்காகச் சென்றார். ஆரம்பத்தில் இவர் நிம்ஸ் மருத்துவமனையில் மூன்றுநாட்கள் வெளிப்புற நோயாளியாகத்தான் சென்று சிகிட்சை பெற்று வந்தார். அங்கு இவருக்கு கொரோனா நோய் தாக்கம் ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. அப்பகுதிகளில் கொரோனா நோயின் தாக்கம் பரவலாக அநேகருக்குப் பரவியிருந்ததால், இவருக்கு ரெம்டெசிவீர் ஊசி (Remdesivir injection) மருந்து இந்தூரிலிருந்து வாங்கிக் கொடுக்கப்பட்டது. ஆயினும், நாளுக்குநாள் இவரது உடலில் ஆக்சிஜன் அளவு குறைந்து கொண்டே வந்தது. இவரது உடன்மிஷனெரிகள் இவரைத் தனியார் மருத்துவமனையில் சேர்க்க பெரிதும் முயற்சி செய்தனர். அதற்காக

பல மருத்துவமனைகளில் அவர்கள் முயற்சி செய்தும், அங்குள்ள படுக்கைகள் ஏற்கனவே நிரம்பி வழிந்ததால், இறுதி யாக சின்ஜ்பாடாவில் உள்ள ஈ.எச்.ஏ. மருத்துவமனையில் இவரைச் சேர்த்தனர். ஆனால், அங்கும் இவரது உடலில் ஆக்சிஜன் அளவு நிலையானதாகக் காணப்படவில்லை. பின்னர் ஏப்ரல் 8-ம் தேதி வென்டிலேட்டர் வசதியுள்ள மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைக்கு இவர் மாற்றப்பட்டார். இவர் வென்டிலேட்டர் உதவி யோடு வைக்கப்பட்டபோதும், இவருடைய உடலில் ஆக்சிஜன் அளவு குறைந்தவாறே காணப்பட்டதால், இவருடைய உடல்நிலை மிகவும் கவலைக்கிடமானதாக மாறிற்று. இவருக்குச் சிகிட்சையளித்த டாக்டர். ராஜேஷ் வசாவா, சகோ. இம்மானுவேலு டைய நண்பராகவும் காணப்பட்டதால், தன்னால் முடிந்த அனைத்து சிகிட்சை முறைகளையும் மேற்கொண்டு இவரது உயிரைக் காப்பாற்ற முனைந்தார். ஆனால், ஏப்ரல் 9-ம் தேதி மாலை 3.45 மணியளவில் சகோ. இம்மானுவேல் தனது அன்புக்குரிய குடும்பத்தாரையும், பாவ்ரா இன சமுதாயத்தையும் விட்டு, இவ்வுலக ஓட்டத்தை முடித்து தேவனிடத்திற்குத் திரும்பினார்.

சகோ. இம்மானுவேல் இறைபிச்சை அவர்களுக்குச் சிகிட்சையளித்த டாக்டர். ராஜேஷ், “மிகவும் மென்மையான, எதிர் காலம் குறித்த உயரிய தரிசனம் கொண்ட, எனக்கு மிகவும் பிடித்த, மரியாதைக்குரிய ஒரு நண்பரை இழந்து விட்டேன். இவரது மரணம் என்னை மிகவும் பாதித்துள்ளது; இவர் எங்கள் மீது அளவுகடந்த நம்பிக்கையையும், அன்பையும் கொண்டிருந்தார்; ஆனாலும் எங்களால் இவரைக் காப்பாற்ற முடியவில்லை; கொரோனா தொற்றுநோய் இவரை அழைத்துச் சென்று விட்டது” என்று தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்தார். பின்பு டாக்டர் ராஜேஷ் அவர்களின் உதவியினால், S.A. திருச்சபைப் போதகரொருவர் இவரது சரீரத்தின் நல்லடக்கத்திற்குத் தேவையான உதவிகளையும், அடக்கம் செய்ய திருச் சபை கல்லறைத் தோட்டத்தையும் கொடுத்தார். ஏப்ரல் 9-ம் தேதி இரவு 9.30 மணியளவில் சகோ. இம்மானுவேலின் சரீரத்தை நகராட்சி ஒப்படைக்க, சித்தாரா மற்றும் காந்தேஷ் பிராந்தியங்களைச் சேர்ந்த நமது மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள், விசுவாசிகள் மற்றும் குடும்பத்தினர்கள் அன்னாரின் சரீரத்தை உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு நல்லடக்கம் செய்தார்கள்.

சகோ. இம்மானுவேல் இறைபிச்சை அவர் களின் பிரிவு, நண்பர் சுவிசேஷ ஜெபக் குழு குடும்பத்தினரை மிகவும் கலக்கத்திற் குள்ளாக்கியிருக்கிறது. இவரது அன்பு மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தார் அனைவரையும் தேவன்தாமே ஆற்றித் தேற்ற இறைஞ்சுகிறோம். பாவ்ரா இனமக்க ளுக்காக வாழ்ந்து, அவர்கள் அனைவரும் கிறிஸ்துவண்டை வருவதற்காக மாபெரும் பொக்கிஷமான பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டை அவர்களது மொழியில் விட்டுச்சென்றுள்ள அருள்திரு. இம்மானு வேல் இறைபிச்சை மெய்யாகவே ஒரு சுவிசேஷ விதையாகப் பாவ்ரா மண்ணில் விதைக்கப்பட்டிருப்பது, தேவனுக்கு நிச்சயம் சுகந்த வாசனையாக அமையுமன்றோ!

*- அருள்திரு. G. எபநேசர் இறை அமிர்தம், குருவானவர் - ஆற்காடு லூத்தரன் திருச்சபை, திருவண்ணாமலை (அருள்திரு. இம்மானுவேல் இறைபிச்சை அவர்களின் சொந்த சகோதரர்).*

*- அருள்திரு. வின்சென்ட் பிரேம்ராஜ் மற்றும் சகோ. இம்மானுவேல் இறைபிச்சை அவர்களோடு ஊழியம் செய்த உடன்மிஷனெரிகள்.*

*தொகுப்பு: அருள்திரு. அறிவர். E. ராஜன்.*



# அருள்திரு. S. ஜாண் பெர்லின் அவர்கள்

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் புதிய பொதுச்செயலாளர் - அறிமுகம்

அருள்திரு. S. ஜாண் பெர்லின் அவர்கள், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் புதிய பொதுச் செயலாளராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்.

### அவரது ஆரம்பக்காலம்:

அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்கள், 1965-ம் ஆண்டு மார்ச் 4-ம் தேதி கிறிஸ்தவ பெற்றோர்களான திரு. செல்வமணி மற்றும் திருமதி. செல்லம்மாள் ஆகியோரின் மகனாக கன்னியாகுமரி மாவட்டம், சேனம்விளையிலுள்ள ஒருமாவிளை என்கிற ஊரில் பிறந்தார். இவரது பெற்றோருக்கு மொத்தம் 5 ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையும் உண்டு.

### ஆவிக்குரிய வாழ்வு:

இவர் தனது இளம்பிராயத்தில் திருச்சபைப்பணிகளில் ஆர்வமுடையவராக இருந்து, வேறு பெரிய எந்தத் தவறான செயல்களிலும் ஈடுபாடின்றிக் காணப்பட்டதால், தன்னை ஒரு நல்ல கிறிஸ்தவராகக் கருதிக்கொண்டார். 1986-ம் ஆண்டுதான் இவரது ஆவிக்குரிய வாழ்வின் திருப்புமுனையாக அமைந்தது. ராபர்ட் டி.மேன்லி எனும் தேவமனிதர் எழுதிய இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றிய ஒரு புத்தகத்தை இவரது ஆரம்பப்பள்ளி ஆசிரியர் ஒருவர் இவருக்குப் படிக்கக்கொடுத்தார். அந்தப் புத்தகம் இவரை இயேசுகிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வழிநடத்தியது.

### ஊழிய அழைப்பு:

இவர் நாகர்கோவிலிலுள்ள ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியில் பி. காம்., பட்டம் பெற்றார். இவர் மிஷனெரியாக செல்ல வேண்டுமென தீர்மானித்திருந்ததால், ஒரு பட்டய கணக்காளராக (Chartered Accountant) வேண்டுமென்கிற கனவு இவரிடம் மேலோங்கவில்லை. ஆனால் மிஷனெரியாவதற்குப் பதிலாக ஒரு போதகராக அல்லது ஊழியத்தைத் தாங்குகிறவராகச் செயல்படலாம் என்கிற பல எண்ணங்கள் வந்தாலும், இவர் தேவஅழைப்பிற்குக் கீழ்ப்படிந்து, 1987-ம் ஆண்டில் நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் ஒரு மிஷனெரியாக இணைந்தார்.





### குடும்ப வாழ்க்கை:

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கருங்கல் என்கிற ஊரில் திரு. கிறிஸ்துதாஸ் மற்றும் திருமதி. பொன்நேசம் அவர்களின் மகளான சகோதரி. லீலாபாயை 1991-ல் இவர் திருமணம் செய்தார். இவரது மனைவி

1976-ம் ஆண்டில் இயேசுகிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, 1980-ல் முழுநேர ஊழியத்திற்கென தன்னை அர்ப்பணித்தவர். இவர் தனது திருமணத்திற்கு முன்னர் 1987-ம் ஆண்டிலேயே குஜராத் மாநிலத்தில் மிஷனெரியாகப் பணியாற்றியவர்.

தேவன் இக்குடும்பத்தாரை இரு பெண்பிள்ளைகளால் ஆசீர்வதித்துள்ளார். இவர்களது மூத்தமகள் திருமதி. நிக்ஸியா ஸான்சியும் இவரது கணவர் திரு. பால் கிங்ஸ்லியும் IIM-ல் தங்களது முதுகலை பட்டப்படிப்பை முடித்து, ஐரோப்பாவிலுள்ள லக்சம்போர்க்கில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களது இரண்டாம் மகள் நிஸிக்ஸ் ஸான்சி B.Sc., நர்சிங் படிப்பை CMC-ல் படித்துள்ளார்.

## திருச்சபை நாட்டும் பணியில் முன்னோடி மிஷனெரியாக இவரது பங்கு:

இவர் தனது மிஷனெரிப்பணிக்கான பயிற்சியை சேலத்திலுள்ள பெத்தேல் வேதாகம கல்லூரியில் முடித்து, சுவைத்தில் இந்திமொழிப்பயிற்சியை முடித்து, நாக்பூரிலுள்ள நமது பணித்தள அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தார். பின்னர் 1989-ம் ஆண்டு இவர் ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள மால்தோ இனமக்கள் மத்தியில் தனது ஊழியத்தை ஆரம்பித்தார். இவர் சுமார் 16 ஆண்டுகளாகப் பகையா பணித்தளம் மற்றும் ஊழியர்கள் பயிற்சித்துறையிலும் (LTI), பின்னர் தீன்பகார் பணித்தளத்திலும் முன்னோடி மிஷனெரியாக ஊழியம் செய்து வந்தார். இவர் 10.10.2004 - அன்று வடக்கு இவாஞ்சலிக்கல் லூத்தரன் அமைப்பு (NELC) மூலமாகக் குருவானவராக அபிஷேகம் செய்யப்பட்டுள்ளார்.

## நிர்வாகத்தில் இவரது பங்கு:

மறைந்த அருள்திரு. இஸ்ரேல் தேவதாஸ் அவர்கள், பணித்தளச் செயலாளராக இருந்தக்காலத்தில் அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்கள், மகாராஷ்டிராவிலுள்ள நாக்பூரில் 4 ஆண்டுகள் பணித்தள நிர்வாகச் செயலாளராகப் பணியாற்றினார். அதன்பிறகு இவர் கிழக்கு மண்டலச் செயலாளராகச் செயல்பட்டு வந்தார். 2007-ம் ஆண்டு தலைமைச் செயலகத்தில் நிதிச்செயலாளராக 4 ஆண்டுகள் பணியாற்றினார். அக்காலக்கட்டத்தில் நிதியைச் சிறப்புப்பாடமாகக் கொண்டு, அதில் முதுகலை பட்டப்படிப்பை (MBA- Finance) பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் படித்து தேர்ச்சிப் பெற்றார்.

பின்னர் 2011-ம் ஆண்டிலிருந்து வியூக உதவி பிரிவின் (Strategic Support) செயலாளராக ஊழியத் திட்டமிடல் மற்றும் பல யுக்திகளை இயக்கத்தில் உருவாக்கினார். அதன்பின் இவர் தன்னார்வ தொழில்நுட்ப வல்லுனர்களுடன் இணைந்து, தொழில்நுட்பக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வடிவமைத்தார். 2015-2017-ம் ஆண்டுகளில் தலைமைச் செயலகத்தில் தகவல் தொடர்புத்துறை செயலாளராகவும், இரண்டாவது முறையாக நிதிச் செயலாளராகவும் செயல்பட்டு வந்தார். 2015-2016-ம் ஆண்டு, அருள்திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ் இவ்வியக்கத்தின் பொதுச்செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன்பு, இவர் அதிகாரப்பூர்வ பொதுச்செயலாளர்களின் இடைநிலைக்குழுவின் ஒரு பிரதிநிதியாக முக்கிய பங்கு வகித்தார். மீண்டும் 2017-ம் ஆண்டு முதல் 2021 -ம் ஆண்டு மார்ச் மாதம் வரை பணித்தளச் செயலாளராக நாக்பூரை மையமாக வைத்துப் பணியாற்றி வந்தார். இவர் ‘மாற்றுக் கலாச்சார ஊழியம்’ மற்றும் ‘தனிப்பட்ட ஊழியத்திறன்களைக் கூர்மைப்படுத்துதல்’ ஆகிய தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தி, அநேகரை ஊழியத்தைத் திறம்படச் செய்ய பயிற்றுவித்துள்ளார்.

கடந்த 2021 ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து நமது இயக்கத்தின் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் நாம் நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு குடும்பமாக வாழ்த்தி, நமது எல்லா ஒத்துழைப்பையும், ஜெப ஆதரவையும் அளிக்க உறுதிக்கொள்ள பட்சமுடன் அழைக்கிறோம். கொரோனா தொற்று அச்சுறுத்தல்கள் வேகமாகப் பரவிவரும் இச்சூழலில், சமூக மற்றும் பொருளாதார வீழ்ச்சி அடைந்துள்ள இந்தச் சவாலான காலக்கட்டத்தில், தேவ ஞானத்துடனும் தேவ பெலத்துடனும் நமது இயக்கப்பணிகளை இவர் சிறப்புடன் வழிநடத்திச் செல்லவும், அதன்மூலம் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியினால் விளையும் இரட்சிப்பை இந்திய மக்களுக்கு நாம் தொய்வின்றி தொடர்ந்து எடுத்துச் செல்லவும் தேவன் அருள்புரிய ஜெபிப்போம்.

## நினைவு வார்த்தைகள்... நவஜீவன் சேவா மண்டல் (NSM) சார்பாக...



கடந்த 50 ஆண்டுகளாக டாக்டர். கமலேசன் அண்ணனை நன்கு அறிந்திருக்கிறேன். 1970-ம் வருடம் நான் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் மருத்துவப்படிப்பு படித்துக்கொண்டிருக்கும்போது, சென்னை வரும்போதெல்லாம், அவர்கள் குருவானவராயிருந்த இம்மானுவேல் மெத்தடிஸ்ட் திருச்சபை ஆராதனையில் கலந்துகொள்வதுண்டு. பின்னர் மருத்துவப்பணியை FMPB மூலமாகச் செய்ய, அதன் கன்வீனராக நான் நியமிக்கப்பட்டேன். ஆனால், அதைத் தனி நிறுவனமாகச் செய்வது நல்லது என்பது அண்ணனது தரிசனமாகக் காணப்பட்டதால், நவஜீவன் சேவா மண்டல் என்கிற நிறுவனம் பிறந்தது. 2 தெசலோனிக்கேயர் 3:1-ல் புனித பவுல் கேட்டுக்கொள்வதுபோல, டாக்டர். கமலேசன் அண்ணன் தனது போட்டோவை எங்களுக்கு அனுப்பி வைத்து ஜெபிக்கக் கேட்டுக்கொள்வதுண்டு. அது அவரது எளிமைக்கும் தாழ்மைக்கும் உதாரணமாக அமைகிறது. நானும், எனது குடும்பத்தாரும், நவஜீவன் சேவா மண்டலின் ஊழியர்களோடு இணைந்து, அண்ணனுடைய முன்மாதிரியான வாழ்விற்காக தேவனைத் துதிக்கிறோம்.

– Dr. A. பிரேம் குமார், Chairman – NSM.

## மிஷனெரி பிரதிஷ்டை



இராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரத்தில் அக்கா மடம் பகுதியிலுள்ள பெனியேல் ஃபுல் காஸ்பல் திருச்சபையில் வைத்து, அச்சபையின் போதகர் அருள்திரு. சகாயராஜ் அவர்களால் நமது மிஷனெரி திருமதி. துர்காதேவி அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இவர்களை ஜெபித்துத் தாங்குகின்ற இத்திருச்சபைப்போதகர் மற்றும் விசுவாசிகளுக்கு நமது இயக்கத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

FMPB – விரிவுப்பணி செயலர் – இராமநாதபுர மாவட்டம்

# ஊழியர்களின் மருத்துவ நிவாரண நிதி



*"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." - மத்தேயு 25:40*

ஊழியர்களின் நலன்மீது அக்கறை கொண்டு அவர்களுக்காய் அனுதினமும் பாரத்தோடு ஜெபித்து, உதாரத்துவமாய்க் கொடுத்துவரும் தங்களோடு, 'ஊழியர்கள் மருத்துவ நிவாரண நிதி' திட்டத்தைப் பற்றி பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம். பல்வேறு ஊழியங்களின் தேவைகளைக்குறித்து அறைகூவல் பத்திரிக்கை வாயிலாகத் தெரியப்படுத்தும்போதெல்லாம் உற்சாகமாகக் கொடுத்து உதவி வருகிறீர்கள். உங்களுக்காக ஆண்டவரைத் துதிக்கிறோம்.

நம் பாரத நாட்டில் 24 மாநிலங்களிலும், 3 யூனியன் பிரதேசங்களிலும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியர்கள் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் அநேகர் மருத்துவ வசதி மற்றும் வாகன வசதிகள் குறைவான கிராமங்களில் தங்கியிருந்து நற்செய்தியைப் பறைசாற்றி வருகின்றனர். மிகவும் பின்தங்கிய கிராமங்களில் சுத்தமான குடிநீர், சுகாதாரமான சுற்றுச்சூழல், போஷாக்கான உணவு போன்றவை கிடைப்பது என்பது அரிதாக உள்ளன. இதனால் நம் ஊழியர்கள் எளிதில் நோய்வாய்ப்படும் நிலை ஏற்படுகிறது. இரவு பகலாகக் கூடுகைகள் நடத்தச்செல்லும்போது கொல்லும் குளிர், கொளுத்தும் வெயில் எனப் பணித்தளங்களில் நிலவும் கடினமான தட்பவெப்ப நிலைகள் போன்றவற்றாலும் நம் ஊழியர்கள் எளிதில் பெலவீனமடையும் சூழ்நிலை உருவாகிறது. கரடு முரடான பாதைகளில் பயணிக்கும்போது விபத்துகள் மற்றும் எதிர்ப்புகளின்போது ஊழியர்கள் கடுமையாகத் தாக்கப்படுதல் போன்றவை மிஷனெரிப்பணியில் தவிர்க்க இயலாதவைகள்.

புற்றுநோய்க்கு மூன்று பேரும், இதயநோய்க்கு ஐந்து பேரும், சிறுநீரகப் பாதிப்புக்கு மூன்று பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இப்படிப்பட்ட கொடிய நோய்கள் ஏற்படும்போதும், விபத்துகள் நேரிடும்போதும் பெரிய தொகை செலவிடப்படுகிறது. தற்போதும் சிலர் கொரோனா நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று சுகம் பெற்றிருக்கிறார்கள். அநேகர் சிகிச்சையிலுள்ளனர். இதற்கென்றும் பெரிய தொகை செலவு செய்யப்படுகிறது. இதுதவிர அநேகர் நாள்பட்ட நோய்களுக்கென்று சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஊழியர்களின் உடல்நலனுக்காகவும், ஊழியங்கள் தடையில்லாமல் நடைபெறவும் ஜெபியுங்கள்.

2020-21ஆம் நிதியாண்டில் மட்டும் ஊழியர்கள் மருத்துவ நிதிக்கென்று ரூ.1,17,88,337/- செலவு செய்யப்பட்டுள்ளது. 2021-22ஆம் நிதியாண்டிற்கான ஊழியர்கள் மருத்துவ நிதித் தேவை ரூ. 1.5 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆண்டவர் தங்களோடு இடைபடுவாரானால் தங்கள் உதாரத்துவமான ஈகையினாலும், ஜெபத்தாலும் ஊழியர்களின் நலனில் பங்கெடுக்க முன்வாருங்கள்.

**மேலும் கூடுதல் விபரமறிய விரும்பினால் தங்கள் அருகில் வாழும் முன்னேற்றப்பணி செயலரையோ, கௌரவ முன்னேற்றப்பணி செயலரையோ அல்லது ஜெபக்குழுத் தலைவர்களையோ தொடர்பு கொள்ள பட்சமாய்க் கேட்கிறோம்.** - நிதித்துறை

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



நமது மிஷனெரி திரு. ஜாண் ஏசுவடியான் அண்ணன் அவர்கள், கடந்த மார்ச் 18, 2021-ல் இந்த உலக ஓட்டத்தை வெற்றியுடன் நிறைவு செய்தார்கள். இவர்கள் 1984 வரை சென்னையிலுள்ள பிரிட்டிஷ் தூதரக அலுவலகத்தில் பணி செய்தவர்கள். 1985-ம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூத்த தலைவர்களில் ஒருவரான அருள்திரு. டாக்டர் J.T.K. டேனியல் அவர்களின் வழிகாட்டுதலின்படி முழுநேர மாக தேவபணியில் ஈடுபட அர்ப்பணித்தார்கள். அதன் தொடர்ச்சியாக 1985 செப்டம்பர் முதல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைமை செயலகப் பணியாளராகப் பணியில் இணைந்தார்கள். இவர்கள் தட்டச்சு, சுருக்கெழுத்து அறிந்திருந்தபடியால், பங்காளர்களுக்குக் கடிதம் மற்றும் நிதித்துறை கடிதத்தொடர்பில் திரு. ஜாண் ஏசுவடியான் அண்ணனின் பங்கு பேருதவியாக இருந்தது. பின் முன்னாள் பொதுகாரியதரிசியான திரு. பேட்ரிக் அண்ணனின் அலுவலக கடிதத்தொடர்பில் ஏசுவடியான் அண்ணனின் அனுபவமும், எழுத்து தாலந்தும் பயன்படும் வகையில் நமது தொடர்புத்துறையில் பணிசெய்ய இவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

தலைமை செயலகப் பணியாளர்களில் ஏசுவடியான் அண்ணன் வயதில் முதிர்ந்தவராயினும், இளம்துறை பொறுப்பாளருடன் இனிய முகத்துடன் பணிசெய்தது, இளம்பணியாளர்களுக்கு நல்மாதிரியை வெளிப்படுத்தியது. இவர்கள் குறைவான வார்த்தைகளில் நிறைவான செய்தியை வாழ்வில் பிரதிபலித்தார்கள் (''MAN OF A FEW WORDS"). அமைதியாகச் சில வார்த்தைகளை அலுவலகச்சூழலில் பேசினாலும், தேவையான நேரத்தில் சுருக்கமான வார்த்தைகளில் செய்தியை நறுக்கென சொல்ல தவறியதில்லை. எதிர்பாராத சூழலில் இவர்கள் இவ்வுலக ஓட்டத்தை நிறைவு செய்தது அனைவருக்கும் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. ஆனாலும் தேவன் நியமித்தப்பணியை மனரம்மியமாக முடித்தார்கள் என உணர்ந்து, இவர்கள் வாழ்விற்காக தேவனைத் துதிக்கிறோம். இவர்கள் பிரிவால் வருந்தும் இவரது மனைவி திருமதி. சுந்தரி ஏசுவடியான், மகள் திருமதி. மேரி பியட்ரிஸ், மகன் திரு. பிரவின் மார்க்கஸ் குடும்பங்களுக்கு தேவன் ஆறுதலையும் சமாதானத்தையும் அருள ஜெபித்துக்கொள்வோம்!

– தகவல்: அருள்திரு. N. ஆசீர்வாதம்.



கடந்த 25 ஆண்டுகளாக நமது மிஷனெரி திருமதி. ஜெயசௌந்தரி ஜெபராஜ் அவர்களை ஆதரித்து வந்த திருமதி. வைடா டிலானோ பர்னபாஸ் அவர்கள், (Rt. HOD - Meenakshi College, Madurai) (10.02.1947 - 19.09.2020) தனது 73 - வது வயதில் இவ்வுலக ஓட்டத்தை முடித்து கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவர்கள் நமது இயக்கத்துக்கு அளித்து வந்த ஆதரவுக்காகவும், தனது குடும்பத்தினரை இவ்வூழியத்தில் ஈடுபட வைத்துச் சென்ற நல்மாதிரிக்காகவும் தேவனைத் துதிக்கிறோம். இவர்களுடைய குடும்பத்தினரின் ஆறுதலுக்காகத் தொடர்ந்து ஜெபியுங்கள்.

– FMPB விரிவுப்பணி செயலர், மதுரை.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



சகோ. S. ஜெயராஜ் அண்ணன் அவர்கள், தூத்துக்குடி மாவட்டத்தி லுள்ள உடன்குடிக்கு அருகாமையிலுள்ள பண்டாரஞ்செட்டிவிளை மற்றும் தங்கநகரம் பகுதிகளில் கடந்த 47 ஆண்டுகளாக நமது ஊழியத்தில் ஜெபக்குழுத்தலைவராகச் செயல்பட்டு வந்தார்கள். மேலும் இவர் தனித்தாள் ஊழியம் செய்வதிலும், ஆராதனை நடத்துவதிலும், சுவிசேஷப்பிரதிகளை விநியோகிப்பதிலும் மிகவும் சிறப்பாக ஈடுபட்டு வந்தார்கள். அநேக கிறிஸ்தவர்களுக்கு மிஷனெரிப்பணியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, அவர்களை நமது ஊழியத்தில் ஈடுபடவைத்ததில் இவர்களின் பங்கு பெரிதும் காணப்பட்டது. கடந்த 2020 மே மாதத்திலிருந்தே நோய்வாய்ப்பட்டிருந்த இவர்கள் 2021 மார்ச் 5-ம் தேதியன்று, இவ்வுலக ஓட்டத்தை இனிதே முடித்தார்கள். இவர்களது மகன் சகோ. லிவிங்ஸ்டன் அவர்கள், நமது ஊழியத்தில் பலவிதங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இவரது மனைவி, 5 மகள்கள் மற்றும் 3 மகன்கள் குடும்பங்களை தேவன் ஆற்றித்தேற்ற நமது ஜெபங்களில் நினைத்துக் கொள்வோம்.

– FMPB விரிவுப்பணி செயலர், மெஞ்ஞானபுரம்.



திரு. J. மனுவேல் அண்ணன் அவர்கள், தேவனுடைய கிருபையால் கோயம்புத்தூர் பகுதியில் ஆசிரியர் பணியைச் செய்து வந்தார்கள். அவ்வாறு இவர்கள் தான் வேலை பார்க்கும் நாட்களில், நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தில் அதிக ஈடுபாடுக் கொண்டவர்கள். இவர்கள் ஒரு சிறந்த ஜெபவீரர், எப்பொழுதும் முழங்காலில் நின்று அதிக நேரம் ஜெபிக்கும் பழக்கமுடையவர்கள். கடந்த 30 ஆண்டுகளாக ஜெபக்குழுத் தலைவராகச் செயல்பட்டு வந்தார்கள். வயது மூப்பின் காரணமாகக் கடந்த 28.03.2021 அன்று தனது 77-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அருமையான இத்தகப்பனாரை இழந்திருக்கும் இவரது குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்வோம்.

– FMPB பிராந்திய விரிவுப்பணி செயலர், கோயம்புத்தூர்.

## இடைவெளி தந்த நெருக்கம்!

புது டெல்லி, பட்பர்கன்ஜ் பணித்தளம், திரிலோக்புரி திருச்சபையைச் சார்ந்த நமது விசுவாசிகளான கணேஷ் பரீக், விஷ்வகாந்த், பிரதீப் பரீக் ஆகியோர் கொரோனாவை முன்னிட்டு அரசாங்க விதிப்படி நாம் கடைபிடிக்க வேண்டிய சமுதாய இடைவெளியை மனதில் கொண்டு, விசுவாசிகள் யாவரும் இடைவெளி விட்டு அமர்ந்து, ஒருமனதோடு கர்த்தரை நெருங்கி ஆராதிக்கும்படி, தொலைக்காட்சி பெட்டியொன்றைத் திருச்சபைக்கு வாங்கி வழங்கினர். இவ்வாராதனை மூலம் விசுவாசிகள் அனைவரும் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டதோடு, இந்த ஆவிக்குரிய ஐக்கியத்தினால் கர்த்தரிடம் மேலும் வளம் பெற்றனர். தேவனுக்கே புகழ்!

**மே 1**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஆலிஸ் தர்மமணி
திருமதி. சிப்போரா பீரோ, திரு. பாபு பெஞ்சமின்
திருமதி. புரோசன்சிதா மாலி, திரு. மனோஜ் P J
திருமதி. கோகனி சுமித்ராபேன் கிறிஸ்டியன்
திரு. ஜாண் பெனின் J
திருமதி. ரூபா ஏலவாகி சன்னமல்லப்பா
திரு. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் R

# ஜம்மு

## ஜம்மு பிராந்தியம்:

### வசாவே எலேஷ் பிரபு & சுனிதா வெச்யா

**துதிக்க:** புதிதாக 24 கிராமங்களில் இயேசுவின் அன்பைக் குறித்ததான இனிய நற்செய்தியைப் பகர்ந்துள்ளனர். புதிதாக 24 நபர்கள் கிறிஸ்துவைத் தங்களது இரட்சகரென விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். நௌஷேரா பணித்தளத்தைச் சேர்ந்த சொர்மாக்டி கிராமக்குழு நாம் தொடர்ந்து அங்கே ஆராதனை நடத்துவதற்கு அனுமதி தந்துள்ளது. மஹசா, ராம்தாஸி, பத்வால், பாகத், சம்யார் ஆகிய மக்களினக் கூட்டங்கள் மத்தியில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன. பெண்களுக்கான ஜெபக்குழு மற்றும் வேதாகம வகுப்புக் குழுக்கள் யாவும் கிரமமாக இயங்கிக் கொண்டிருக்கின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பல கிராமங்களில் ஊழியத்தைச் சுதந்திரமாகச் செய்வதற்குத் தடையாக இருக்கும் கட்டுப்பாடுகள் விலக; உலகத்திற்குரிய சிந்தைகளிலிருந்து விடுபட்டு, ஊழியங்களில் ஈடுபட அநேக வாலிபர்கள் முன்வர; மன்வால், டூடா, பாதர்வா, கிஸ்துவாத், பாடர் ஆகிய கிராமங்களில் நமது ஊழிய விரிவாக்கத்திற்காகச் செயல்படக்கூடிய மிஷனெரிகள் கிடைக்க; குடலிறக்கப் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு வயது சிறுவன் ஜோயல் பூரண சுகமடைய ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ஆனி:

### ஹின்சாவ்ம் & சிங்கோயி கிம்

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் கிருபை தந்தார். மின்சார அதிர்வு ஆபத்தினின்று தேவன் காம்லா டெரியைக் காப்பாற்றினார். விசுவாசத்தில் பின் மாற்றமடைந்திருந்த சகோ. முர்காராம் மீண்டும் ஆலய ஆராதனைக்கு வருகிறார். நமது ஊழிய ஆசீர்வாதத்திற்காக 40 நாட்கள் உபவாச ஜெபத்தை மேற்கொள்ள தேவன் நமது ஊழியர்களுக்கும் விசுவாசிகளுக்கும் ஒத்தாசை புரிந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி ரோஹித் அகிலிற்குத் தகுந்த வேலையொன்று கிடைக்க; பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; தீய ஆவியின் கட்டிலிருந்து ராம் தியால் விடுவிக்கப்பட; இரத்த வாந்தி எடுக்கும் சரண்தாஸ் பரிபூரண சுகமடைய ஜெபிப்போம்.

**மே 2 ஞாயிறு**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. லிசா பீட்டர் அருளானந்தம்
திரு. காட்வின் கிருபாகரன், திரு. சுனில் குமார்

## ஹிமாச்சல் பிரதேச அலுவலகம் :

### த்சாங்சே சங்தம் & சுச்சானோ

**துதிக்க:** நமது ஊழியத்தின் மூலம் தேவன் நமக்கு அநேக புதிய தொடர்பாளர்களைத் தந்துள்ளார். எதிர்ப்புகளின் மத்தியிலும் நேர்வா பணித்தளத்தில் 6 நபர்கள் புதிதாக இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ளனர் மற்றும் ஏராளமான ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ள வாஞ்சிக்கிறார்கள். நேர்வா பணித்தளத்தில் 3 சிறிய ஜெபக்குழுக்களையும், ராம்பூர் பணித்தள நிர்மந்த் என்ற இடத்தில் ஒரு சிறிய ஜெபக்குழுவையும் உருவாக்க தேவன் கிருபை புரிந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழிய அர்ப்பணமுள்ள 3 மிஷனெரிகளும், 6 சுதேச ஊழியர்களும் நமது ஊழிய விரிவாக்கத்திற்கென கிடைக்க; நேர்வா பணித்தள சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனம்மாற; நமது சுதேச ஊழியர் சிக்கேந்தர் விதேஷ்குமார் மற்றும் நமது மிஷனெரி இம்மானுவேல் ஆகியோரது குடும்பங்களில் குழந்தை செல்வங்கள் பிறக்க ஜெபிப்போம்.

# பஞ்சாப்

## பட்டாலா:

### வால்வி நேதாஜி டாடு & கல்பனா

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவண்டை கிட்டிச் சேர்ந்துள்ளனர். புதிதாக 3 குடும்பங்கள் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டி வருகின்றனர். பின்மாற்ற மடைந்திருந்த சைமன் & புஷ்பா தம்பதி யினர் மீண்டும் ஆலயம் வர தேவன் கிருபை ஈந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது தன்னார்வ ஊழியர் தங்கி ஊழியம் செய்வதற்கான தகுந்த வீடொன்று அவருக்குக் கிடைக்க; கொடிய வியாதியிலிருந்து சோனியா & திலக்கின் குழந்தை தன்ஷியையும், நீரிழிவு நோயி லிருந்து சோனியையும், மன வியாதி யிலிருந்து ரமேஷையும் தேவன் ஆரோக்கியமடையப் பண்ண; நமது விசுவாசிகளான சினேகா, சோனி ஆகியோருக்கு மழலை செல்வங்களைத் தந்து தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

## மால்வா பிராந்தியம்:

### பினோத் சம்பிரமரி & மிரிலா

**துதிக்க:** புதிதாக 7 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனைக்குள் கிருபையாக வந்துள்ளனர். சுக்தீப் சிங் & ரஜ்னி கௌர் தம்பதியினரிடையே தேவன் தமது சமாதானத்தைக் கட்டளையிட்டார். பல வருடங்களுக்குப்பின் நமது விசுவாசி ராஞ்சு கௌருக்குச் சுகப்பிரசவத்தின் மூலம் குழந்தை பெற தேவன் கிருபை அருளினார். தரம்கோட் ஆலய பலிபீடப்பணி சிறந்த முறையில் நிறைவுற்றது. தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் பிரீத்தியை விடுவித்த தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அஜித்வால், சட்சாக், ராய்கோட், கோத்லி, தரம்கோட், போபாரா, டுடிக்கி ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; குடி மற்றும் புகையிலை பிடிக்கும் பழக்கங்களுக்கு அடிமையாக இருக்கும் குடும்பங்களுக்கு தேவன் அற்புத விடுதலை கொடுக்க; வீரா கௌரின் குடும்பத்தில் தேவசமாதானம் பொங்கி வழிய; நமது புதிய விசுவாசிகளான பாபி கௌர், ரேகா, கது சிங், ஹீனா ஆகியவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

## மே 3 திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜெசுபாய் மெக்வான்
திரு. விக்டர் ஜெயசீலன் C, திருமதி. ஷீலா சண்முகம்
திரு. ஜெபராஜ் சாமுவேல் V P
திருமதி. சாராள் ஜாண்சி ராணி ஜஸ்டின்
திருமதி. சியாமளாபாய் சத்யப்பா, திரு. வினு M
திருமதி. ஆனந்தி சங்கர், செல்வி. சாந்தி மால்தோ

### ஃபாசில்கா:

**நிஜம் முசாஹரி & சரோஜினி நர்சாரி**

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். நமது விசுவாசி பிரேமிற்கு அவரது பணியை முன்னிட்டு அரசாங்கக் கடனுதவி கிடைக்க தேவன் கிருபை காட்டியுள்ளார். நமது ஆலயத்திற்கென ஓர் அழகிய பிரசங்கப்பீடத்தை நமது விசுவாசியொருவரின் குடும்பம் நன்கொடையாக ஈந்துள்ளததற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளை விசுவாசப் பாதையினின்று வழிவிலகச் செய்கின்ற மக்கள் மனம்மாற; ஃபாசில்கா பணித் தளத்திற்கு ஓர் ஆலயமும், ஓர் தன்னார்வ ஊழியரும் கிடைக்க; மீட்டுவின் குடும்பம் கிறிஸ்துவின் இரட்சிப்பிற்குள் வர; லோமோசார் ஆலயத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டப்பட ஜெபிப்போம்.

### மலோட்: ஜாண்சன் & பெனிட்டா

**துதிக்க:** புதிதாக 5 குடும்பங்கள் கிறிஸ்தவ விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். கழுத்து சுரப்பி (தைராய்டு) பிரச்சனையிலிருந்து பல்ஜீத் கௌரும், தோல் ஒவ்வாமை நோயிலிருந்து பேபி அட்ரினும், சரீரக்கட்டிகளிலிருந்து கிருஷ்ணன் மற்றும் சுக்பிரீத் கௌரும், தொண்டை கோளாறிலிருந்து பிரியங்காவும் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வீர்பால் கௌரின் குடும்பத்தில் தேவசமாதானம் நிலவ; சுக்விந்தர் சிங் மற்றும் யத்விந்தர் சிங்கின் ஆத்தும இரட்சிப்பிற்காக; உள்உடற்கூறு கட்டியிலிருந்து ரேகாவையும், ஒவ்வாமை நோயிலிருந்து கோபிந்த் சிங் மற்றும் அமன்தீப் கௌரையும் தேவன் நன்கு சுகப்படுத்த ஜெபிப்போம்.

### முக்த்சார்:

**ஜித்தேந்திர டிகல் & ஊர்பசி**

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் அடைக்கலம் நாடி வந்துள்ளனர். தங்களது ஆவிக்குரிய பயனை முன்னிட்டு லெந்து கால ஜெப ஒழுங்குகளை உண்மையுடன் நேர்த்தியாக தேவனோடு செலவிட நமது விசுவாசிகளுக்கு தேவன் இரக்கம் காண்பித்தார். நமது ஊழியத்திற்குப் பலவிதங்களில் உதவி செய்ய அநேக வாலிபர்கள் முன்வருகின்றனர். நமது விசுவாசி குல்வந்த் வெளிசந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளில் அக்கறையுடன் உதவி செய்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நமது விசுவாசி பல்வீர் தான் ஜெபித்துத் திட்டமிட்டுள்ளபடி தனக்கென்று ஓர் வீடு கட்டத் தேவையான நிலமொன்றை வாங்க தேவன் உதவிக்கரம் நீட்ட; நமது புதிய தொடர்பாளர் டிங்கு குமார் தனது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் தைரியமாக அறிக்கையிட; கச்சா கலேவாலா கிராம குச்சரணின் குடும்பத்தில் தெய்வீக சமாதானம் ஊற்றப்பட; கண் பிரச்சனையிலிருந்து மன்ஜீத் கௌர் சுகமடைய ஜெபிப்போம்.

## மே 4 செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹெப்சிபாய் சைரஸ், திரு. அனில் குமார்
திருமதி. லீகர்ள் மேரி கோல்டன்
திருமதி. சீதா ஐசக், திரு. ஜெபக்குமார் P
திருமதி. ரெளட் ஜசோதாபேன் பிரமோத்குமார்
திருமதி. ஜெபசீலி டேனியல் மார்வெல் ராஜ்
திருமதி. ஏஞ்சலின் விக்னேஷ்வரன்

### நிஹல் சிங் வாலா:
### ஜெபசீலன் & மெர்சி எலிசபெத்

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்து வண்டை வந்துள்ளனர். கர்த்தர் ஷீராவைப் பெரிய விபத்தினின்று பாது காத்தார். அதிக இரத்தமுத்தத்தினால் சிரமப்பட்டுக்கொண்டிருந்த சாந்தி மங்கலை தேவன் சுகமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தினைச் சந்தித்திருக்கும் இந்தர்ஜீத்திற்கு விரைவில் அக்காயங்கள் யாவும் ஆறி குணமடையவும், கழுத்து சுரப்பி பிரச்சனையிலிருந்து ரேகா மற்றும் கமல், வலிப்பு நோயிலிருந்து ரக்ஷா, பல்வேறு சுகவீனங்களிலிருந்து மாயா யாவரும் பூரணமான சுகமடைய வும்; நமது விசுவாசிகளான கஹன் மற்றும் ரிங்குவிற்கு நல்ல வாழ்க்கை துணைகளமைய ஜெபிப்போம்.

### பகாபூரானா: ராஜேந்திரன் & ஹேனா மேரி ஸ்லெஸர்

**துதிக்க:** 3 இடங்களில் நடந்த வாலிபர் கூடுகைகளை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். சுமாத்பாய் கிராம விசுவாசிகள் யாவரும் வியாழன்தோறும் அவர்கள் பகுதியில் நடக்கும் இரவுநேர ஜெபக் கூடுகைகளில் தவறாமல் பங்குப் பெறுகின்றனர். புத்சிங்வாலா கிராம மஜ்பி மக்களினம் மத்தியில் ஊழியம் செய்ய சுவிசேஷ வாசல் திறந்துள்ளது. சாஹோகி கிராம விசுவாசிகள் செவ்வாய்க்கிழமை தோறும் கூடி ஜெபிக்கவும், தேவ வசனத்தை கவனமாகக் கற்றுக்கொள்ளவும் தேவன் அநுக்கிரகம் ஈந்து வருகிறமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுமாத்பாய் கிராமத்தில் ஞாயிறு ஆராதனை தொடங்கப்பட; பின்மாற்ற மடைந்திருக்கும் ரஜினா கிராம விசுவாசிகள் யாவரும் மீண்டும் தேவகிருபையால் விசுவாசத்திற்குள் வர; உள்உடற்கூறு கட்டியிலிருந்து பல்ஜீத் கௌர் அற்புத சுகம் பெற ஜெபிப்போம்.

### புத்லாடா:
### சஞ்சீப் ஆனந்த் & பிரஸ்துதா

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 14 நபர்கள் கிறிஸ்துவின் பக்கம் திரும்பியுள்ளனர். 150 வீடுகளில் ஜெபக்கூடுகைகளை நல்லொழுங்கின்படி நடத்த தேவன் நமது ஊழியர்களுக்கு அருள் செய்தார். பரேட்டா துணை மையத்திலிருந்து 8 புதிய குடும்பங்கள் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டத் துவங்கியுள்ளனர். நமது விசுவாசி ஆரதிக்குச் சுகப்பிரசவத்தை தேவன் கட்டளையிட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடக்கவுள்ள ஊழிய நிகழ்ச்சிகளின் ஆசீர்வாதத்திற் காக; நமது விசுவாசிகள் குடிப்பழக்கத்தி லிருந்து முழுவதுமாக விடுபட; ராம்தீப் கௌர், அமன்தீப் கௌர், முஸ்கன் கௌர், சுப்ரஷ்மிதா, மனிஷா ஆகியோரின் குடும்பங்களில் மழலை செல்வங்கள் பிறக்க; பாவனிகார் கிராம ஆலயத் திற்கு விரோதமாக இருக்கும் நீதிமன்ற வழக்கு விரைவில் சுமூகமாக முடிவடைய ஜெபிப்போம்.

மே
5
புதன்
உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஸ்டீபன் ஜெயசீலன் B
திருமதி. ஜெஸி ஜீவபிரபா டேவிட்
திருமதி. மேபல் வசந்தகுமாரி பாபுராஜ்
திரு. புஷ்பராஜ் R, திரு. பரணிதரன் S

# ஹரியானா

## கலான்வாலி:

### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** புதிதாக சோர்மார் மற்றும் தாப்பி கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. கடந்த நாட்களில் நடந்த சிறுவர் முகாமை தேவன் பலவிதங்களில் ஆசீர்வதித்துக் கொடுத்தார். புற்றுநோயி லிருந்து தேவன் பரம்ஜுத்தைக் காப்பாற்றி யதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹர்பன்ஸ் கௌரின் மரணத் தினால் சோர்ந்து போயிருக்கும் அவரது குடும்பத்தினரின் மனஆறுதலுக்காக; மனக்கோளாறினால் கஷ்டப்படும் பாரு வின் மகன் மற்றும் குஷ்டரோகத்தினால் அவதிப்படும் ஓதான் கிராம சந்திராபாய் இருவரும் பூரணமாகச் சுகமடைய ஜெபிப்போம்.

## ஹரியானா பிராந்தியம்:

### பிபாபா பானி & பித்திகா

**துதிக்க:** தேவகிருபையால், இப்பணித் தளத்தில் அதிகம் எதிர்ப்புகள் இராதபடி தேவன் இம்மட்டும் தொற்றுநோயிலிருந்தும், ஏதுகரமற்ற பிற சூழ்நிலைகளிலிருந்தும் தேவன் நமது மிஷனெரிகளையும் சுதேச ஊழியர்களையும் ஜீவனுடன் பாதுகாத்து வருகிறார். கடுமையான துன்ப நேரங்களிலும் தேவன் நமது விசுவாசிகளின் எல்லாவிதத் தேவைகளையும் சந்தித்து அவர்களைப் பாதுகாத்து கொண்டார். எவ்விதப் பிரச்சனையுமின்றி நேரிடையா கவோ அல்லது நிகழ்நிலை (Online) மூலமாகவோ நமது விசுவாசிகளைத் ஊழியத்தொடர்பு கொள்ள தேவன் ஈந்த நன்மைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீய வழிகளைப் பின்பற்றும் ஜீவன்நகர் பணித்தள மக்களின் வாழ்க்கை யில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை இறங்க; தீபஒளி ஆலயத்தின் ஞாயிறு வேதாகம வகுப்பிற்கான நிதித்தேவைகள் யாவும் சந்திக்கப்பட; சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டும் குல்வந்த் சிங், சுர்ஜித் கௌர், சுக்விந்தர் சிங் ஆகியோர் இரட்சிக்கப்பட; வேதாகம வகுப்புக்குழு மற்றும் சபை மூப்பர்குழு அனைத்து திருச்சபைகளிலும் உருவாக்கப்பட ஜெபிப்போம்.

## *கிறிஸ்துவின் விடுதலை – குடும்பத்தை இணைத்தது!*

*மத்தியப் பிரதேசம், கோராடூங்ரி பணித்தளத்தில் ராத்மாடி கிராமத்தைச் சேர்ந்த பியாரியும், ஓம் பிரகாஷும் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதி னிமித்தம், தங்களது பெற்றோராலும் உடன் பிறப்புகளினாலும் துரத்தப்பட்டனர். பின்னர், பியாரியின் சகோதரி ராதா அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு, அவளுடைய விடுதலைக்காகப் பெற்றோர் எவ்வளவோ முயற்சி செய்தும், எல்லாம் வீணாய்ப் போனது. பியாரி தான் வணங்கும் தேவனிடம் இறைஞ்சி, ராதாவிற்கு விடுதலையைப் பெற்றுத்தருவாள் என்ற நோக்கத்துடன் ராதாவின் மூத்த சகோதரியான பியாரியின் இல்லத்தில் அவர்கள் அவளை விட்டுச் சென்றனர். அவர்கள் நினைத்தப்படியே பியாரி, அவளை நமது ஆராதனைக்கு அழைத்து வந்தார். விசுவாசிகள் அனைவரும் இணைந்து ஜெபிக்க, ராதா விடுதலை அடைந்தாள். இதன் விளைவாக அனைவரும் தற்போது கிறிஸ்துவின் மகிமைக்காக ஒரே குடும்ப மாக இணைந்து வாழ்கின்றனர். அல்லேலூயா!*

**மே 6 வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ராஜன் E, திரு. ராஜேந்திரன் S
திரு. சந்தியா நாயக், திரு. சாம்ராஜ் D
திருமதி. விமலா டெய்சி ஜாண்பால் ஹாரிஸ்
திருமதி. கீதாஞ்சலி பெஹறா கருணாகர்

### ஃபத்தேஹ்பாத்: டேவிட் எஸ். & ஜெப கிரேஸ்

**துதிக்க:** புதிதாக 13 நபர்கள் கிறிஸ்துவைக் குறித்து அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். பத்லிதாபர் பகுதி ஆலயச் சுற்றுச்சுவர் கட்டுவதற்கான நிதித்தேவையை நமது விசுவாசிகளே தன்னார்வமாகக் கொடுத்து பூர்த்தி செய்ய தேவன் அநுக்கிரகம் ஈந்தார். பாகுவாலி பகுதி நமது விசுவாசி பாருவின் பச்சிளங்குழந்தையின் இருதயக் கோளாறை தேவன் அற்புதமாகக் குணப் படுத்தினார். அசோக்நகர் மற்றும் தரியாபூர் கிராமங்களிலிருக்கும் நமது புதிய விசுவாசிகள் தவறாமல் ஆலய ஆராதனைகளில் வந்து பங்குப்பெற தேவன் அவர்களை வழிநடத்துகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு இருக்கும் தடைகள் யாவும் மறைய; எல்லா வரையறைகளின் மத்தியிலும் தற்காலிகமான கூடாரங்களில் தங்கி ஆராதிக்கும் மக்களுக்கு விரைவில் திடமான ஆலயங்கள் கட்டியெழுப்பப்பட; அனைத்து தீயப்பழக் கவழக்கங்களிலிருந்தும் நமது விசுவாசிகள் முழுமையாக வெளிவர; பட்டியா கிராம பிரமோத் தீராத முதுகு வலியிலிருந்தும், அசோக்நகர் பகுதி கிருஷ்ணன் மற்றும் பிரகாஷ் மூட்டுவலியிலிருந்தும் முற்றிலுமாகச் சுகமடைய ஜெபிப்போம்.

# உத்தரகாண்ட்

### பஸ்பூர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. இரத்த வாந்தி கோளாறிலிருந்து ரமாவதி, காசநோயிலிருந்து சுர்ஜன் சிங், சரீரக் கட்டிகளிலிருந்து சுபாஷ் மற்றும் கௌதம் ஆகியோரை தேவன் முற்றிலுமாகக் குணப் படுத்தினார். நமது விசுவாசி குல்தீப் கௌருக்குக் குழந்தை பாக்கியம் கிடைத்தது. மோனிகா, ரமாவதி தேவி ஆகிய இருவரையும் தேவன் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேஷி இன மக்கள் கூட்டத்தினரின் இரட்சிப்பிற்காக; குடிப்பழக்கத்திலிருந்து வினோத் விடுதலை பெற; நமது விசுவாசிகளான விர்வாதி, கிருஷ்ணா ஆகியோருக்கு நல்ல வாழ்க்கைதுணைகள் அமைய ஜெபிப்போம்.

### மல்தன்சோர்: ஷிஷுபால் & அனிதா

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி பரப்பப்பட்டுள்ளது. புதிதாக 5 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். 3 ஜெபக் குழுக்களையும், 2 வேதாகம வகுப்புக் குழுக்களையும் தேவன் உருவாக்க உதவி செய்தார். நமது விசுவாசிகளுடைய செலவிலேயே விசுவாசிகளின் ஒருநாள் கூடுகை நடத்தி முடிக்க தேவன் பாராட்டிய நன்மைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தாரி மற்றும் நடிபூர் திருச்சபை மக்கள் தாங்கள் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிக்க தேவையான தேவ ஞானம், பெலன் அவர்களுக்கு அருளப்பட; பத்ராம்பூர் கிராமத்தில் ஒரு துணைமையம் துவங்கப்பட; நமது விசுவாசி ராதிகாவிற்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; நடக்கப்போகும் வாலிபர் மற்றும் ஞாயிறு வேதாகமப்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துத் தர ஜெபிப்போம்.

**மே 7 வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரமேஷ்பாய் கிறிஸ்டியன், திரு. குமாரவேல் S
திருமதி. ஃப்ளாரன்ஸ் சுதாகரன்
திருமதி. ஸ்டெல்லா ராணி கில்பர்ட்
திரு. சமரேந்திர சிங், திரு. டேனியல் அருள்மணி
திருமதி. நகோமி ராஜம் சாவ் புன்யா
திருமதி. மேனகா கோபிகிருஷ்ணன்

# டெல்லி

## பட்பர்கன்ஜ்:

### பி.ஜி. கிறிஸ்டோபர் & மேபல்

**துதிக்க:** திரிலோக்புரி திருச்சபையில் வாரந்தோறும் நடைபெறக்கூடிய வேதாகம வகுப்பொன்று தொடங்கப்பட்டு, 40 விசுவாசிகள் முதல் நாளிலேயே அதில் கலந்து கொண்டு, தேவ வசனத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். ஆபிரகாமிற்குச் சிறந்த பள்ளியொன்றில் படிப்பதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது. நமது விசுவாசி கோமலுடைய திருமணத்தின் தேவைகளை தேவன் அற்புதமாகச் சந்தித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளின் மத்தியில் திரளான ஜெபக்குழுக்களும், வேதாகம வகுப்புக்குழுக்களும் ஆரம்பிக்கப்பட; நமது விசுவாசிகளான ராஜேஷ்வரி, லலிதா ஆகியோருக்கு மழலை செல்வங்கள் கிடைக்க; தலையில் ஏற்பட்ட காயத்திலிருந்து சோனு, பித்தப்பைகல் கோளாறிலிருந்து சுதா, வலிப்பு நோயிலிருந்து ரட்சணா, வாய்ப்பேச இயலாமையிலிருந்து ஆர்யா, புற்றுநோயிலிருந்து ராணி ஆகியவர்களை தேவன் அற்புதமாகச் சுகமாக்க; கமல், ஜேம்ஸ், லலிதா, கோமல் ஆகியோரது இல்லங்களில் தேவசமாதானம் நிரம்பி வழிய ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

## அனுப்கார்:

### போடார் அம்ருத் பாய் & சுவேரா மார்த்தா

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. புதிதாக 5 நபர்கள் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். 2 PGM, 13 K, சமீஜா கோதி, கோக்ராவாலி, 4 A கிராமம், 26 A கிராமம், ரவலா, விஜய் நகர் ஆகிய இடங்களில் நடந்த சத்சங் கூடுகைகளையும், சாகி, பிரேமா நகர், 13 K, விஜய் நகர் மற்றும் கரசானா பகுதிகளில் நடந்த வேதாகம வகுப்புக்குழுக்களையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் ஆலயம் கட்டத் தகுந்த நிலமொன்று கிடைக்க; மகேந்திர சிங், சத்பால், அருண், சுமித்ரா, ஓம்பிரகாஷ், பாபு குடும்பம் ஆகியவர்களின் இரட்சிப்பிற்காக; சாத்ரானா திருச்சபையினரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; கவிதாவின் சுகப்பிரசவத்திற்காக; இந்துராஜ், சோனி, மகேந்திர சிங், மோகன் அரோதா, முக்காராம், சந்துரு, ஓம்பிரகாஷ், ஹர்தேவ் சிங், தாரா சிங்கின் குடும்பம் ஆகிய நமது புதிய தொடர்பாளர்கள் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

மே
8
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜஸ்டின் Y
திருமதி. நிருபோமா கோஸ்லா நாத்தான்

## கேர்வாடா:
### பட்டேல் தேவுபாய் & ஜமுபேன்

**துதிக்க:** திம்மத் என்ற கிராமத்தில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 17 குடும்பங்கள் நமதாலய ஆராதனையில் புதிதாக வந்து பங்குப்பெறுகின்றனர். திருமணமாகி 7 வருடங்களுக்குப்பின் நமது விசுவாசி ராஜுபாயின் மனைவி கருத்தரிக்க தேவன் கிருபை நல்கியுள்ளார். உள்உடற்கூறு கட்டியிலிருந்து ஹன்ஜா தாமாரையும், பக்கவாதத்திலிருந்து சாந்துபாயையும், வாய்ப்பேசாமையிலிருந்து ஓதா கிராம லலித்தையும், சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து பகவன் லாலாவையும் தேவன் குணமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காம்தி அஹதிரியில் ஆராதனை ஆரம்பிக்கப்பட; தால்பட்டிபுரா திருச்சபையைச் சார்ந்த மகேந்திரா & ரீட்டாவின் குடும்ப வாழ்வில் தேவ சமாதானம் நிலவ; சாண்டு, லலித், மகேஷ், லட்சுமன், ராஜு, ராகேஷ் ஆகியோரது குடும்பங்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட; லலித் மற்றும் சங்கீதா காசநோயிலிருந்தும், ஓதா கிராம யோகேஷ் நுரையீரல் பிரச்சனையிலிருந்தும், பனசிமால் கிராம சாந்துபாய் பக்கவாதத்திலிருந்தும், நமது சபை மூப்பர் லால்ஜிபாயின் மனைவி லட்சுமிபேன் கால் காயத்திலிருந்தும் முற்றிலுமாகச் சுகம்பெற ஜெபிப்போம்.

### சாங்ரியா: பவுலோஸ் பர்ஜோ & பினிட்டா டொப்போ

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 7 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். ஷாதுல்சாஹரிலுள்ள நமது விசுவாசி ராணிக்குக் குழந்தை பாக்கியம் கிடைத்தது. நமது புதிய தொடர்பாளர்களான அலிபுரா கிராம இந்துராஜ், அமர்கார் கிராம மார்கா சிங், மரக்சார் கிராம ரட்சணா கௌர் ஆகியோருடைய குடும்பங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்திருக்கின்ற ஹர்தார் சிங் கர்த்தருக்குள் தனது விசுவாசத்தைத் தைரியமாய் அறிக்கை செய்து திருச்சபையில் இணைய; நாகரானா திருச்சபையைச் சார்ந்த நமது விசுவாசிகள் யாவரும் ஆலய ஆராதனையில் தவறாது கலந்து கொள்ள; டிவாலா கிராம பர்வீர் சிங் எலும்பு மூட்டு வலிகளிலிருந்தும், பாட்லி கிராம பல்ராம் தீராத கால் வலியிலிருந்தும் முழுசுகம் பெற ஜெபிப்போம்.

### *மயிரிழையில் தப்பினர்!*

*மத்தியப் பிரதேசம், உதய்நகர் பணித்தளத்திலுள்ள போட்லா கிராமத்தில் நடந்து கொண்டிருந்த கூட்டத்தில், எதிர்ப்பாளர்கள் சிலர் கும்பலாக வந்து அக்கூட்டத்தை நிறுத்தவும், நமது சுதேச ஊழியர்களையும் விசுவாசிகளையும் அடிக்கவும் ஆயத்தமாக இருந்தனர். தேவகிருபையினால் அடிபடாமல் அற்புதமாக அனைவரும் மயிரிழையில் உயிர் தப்பினர். எதிர்ப்பாளர்கள் வெகு அவமானத்துடன் திரும்பிச் சென்றனர். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. முத்துச்செல்வி செந்தில்குமார்
திரு. வகேரா பிரமோத்குமார் தர்மபாய்

## கைர்த்தல்:

### செல்வராஜ் & செல்வம்மாள்

**துதிக்க:** ஒரு நபர் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் சேர்ந்துள்ளார். 15 கிராமங்களில் இரவுநேர ஜெபக்கூடுகைகள் எவ்விதத் தடையுமின்றி நடந்தன. சில மாதங்களாகக் காணாமல் போயிருந்த சிம்ரன் மீண்டும் தன் வீடு திரும்பினார். 4 வருடங்களாகப் பிரிந்திருந்த நமது விசுவாசி ரஜினியின் கணவர் மீண்டும் தன் குடும்பத்துடன் இணைந்தார். விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருந்த வீர்சிங்கின் குடும்பம் மற்றும் ராஜு மீண்டும் நமது ஆலய ஆராதனைக்கு வருகின்றனர். நமது விசுவாசி மெந்தர் சிங்கின் நிலப்பிரச்சனை தீர்வுக்கு வர தேவன் கிருபை செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீத்டா கிராம திருச்சபையினரின் ஆவிக்குரிய வாழ்விற்காக; நட் சமுதாய மக்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்தேசுவில் வெளிப்படையாக அறிக்கையிட; கமலேஷ் குடும்பம் மற்றும் மொர்காபஸ்ஸி கிராம விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வு நல்வளர்ச்சிப் பெற்றிட; நமது வாலிப வயது விசுவாசிகளுக்கு தேவசித்தப்படி நல்ல வாழ்க்கைதுணைகள் அமைய; இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினால் தனது சொந்த குடும்பத்தினரிடையே நிறைய சவால்களைச் சந்திக்கும் நமது விசுவாசி சோமாவிற்காக; ஜெஷ்வந்த் பக்கவாதத்திலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

### பாவோட்டா: சத்திய பிரகாஷ் & அஞ்சனா மஸிஹ்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டுள்ளன. சாத்னாலி மற்றும் படாடு ஜோஷி கிராமங்களிலிருந்து புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவை மனதார ஏற்றுக்கொண்டுள்ளனர். நமது ஊழியர்கள் நடத்திய இரவுநேர ஜெபக்கூடுகைகளையும், வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளையும் பல்வேறு கோணங்களில் தேவன் ஆசீர்வதித்துத் தந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பத்கவ் கிராம இந்துராஜ் இருதய வலியிலிருந்தும், தைஷ்லாந்து கிராம தடாக்கி அதிகமான சரீர வலியிலிருந்தும், பாசிலானா கிராம மாமலைதேவி கல்லீரல் மற்றும் மூச்சுத்திணறல் பிரச்சனைகளிலிருந்தும் அற்புத சுகமடைய ஜெபிப்போம்.

# உத்தரப் பிரதேசம்

## பர்த்தனா:

### சுரேஷ் மால்தோ & பிரேம்லதா

**துதிக்க:** புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷவாசனை எட்டியுள்ளது. மத்திராம்பூர் ஆலய நிலப்பதிவு சிறப்பாக முடிவடைந்தது. பல்கானா கிராம நமது விசுவாசியின் மகனுடைய திருமணம் கிறிஸ்தவ முறையில் நடத்த ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. வயிற்றில் பட்ட காயத்திலிருந்து தேவன் நமது பாம்கோரா கிராம கௌரி சங்கரைச் சுகமாக்கினார். நமது விசுவாசி நேகாவிற்கு காவற்துறையில் வேலை கிடைத்தது. சீவ்பூர் கிராம நிஷாவைத் தீய ஆவியின் பிடியிலிருந்து கர்த்தர் விடுதலை செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பானிக்கபுரா கிராம மிண்ட்டு விப்பினின் குடும்பத்தில் தேவசமாதானம் நிலவ; பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து அஜித்மால் கிராம ரித்திகா, உஸ்ராஹர் கிராம அஜய்நாத், போல்பூர் கிராம மஞ்சு, பாம்கோரா கிராம சிவகுமார், நாகலா பச்சாய் கிராம சுசில், துர்காபுரா கிராம ராகுல் ஆகியோர் பூரண விடுதலை பெற ஜெபிப்போம்.

## மே 10 திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கென்னத் கரியப்பா
திருமதி. ரத்னம்மா சந்தியா நாயக்
திருமதி. ஜெயா கௌரி செல்வின் சாம்
திருமதி. சாந்தம்மாள் ஜாண்சன்
திரு. உம்பியாக் லால், திருமதி. சரணி டிகே
திருமதி. ஷீபா புஷ்பராணி ஜாண் பெனின்
திரு. ஹென்றி சாலமோன் G
திரு. பங்காரு நாயுடு கர்ரி
திருமதி. மன்ஜுஷா கௌதம்
திருமதி. சங்கீதா ஜெசிந்தா இம்மானுவேல்
செல்வி. ரஷ்மி பிரவா, திரு. டேனியல் தனசிங் S

### ஜின்ஜக்:
**சமரேந்திர சிங் & சுஸ்மித்தா**

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவின் சிலுவையண்டை வந்துள்ளனர். போலாநகர் ஆலயத்தில் வைத்து நடந்த பெண்கள் கூடுகையையும், ஊழியப் பின்தொடர்பணிகளையும், இரவுநேர ஜெபக்கூடுகைகளையும் தேவன் பலவிதங்களில் ஆசீர்வதித்துத் தந்தார். காமிலா கிராம நமது விசுவாசிக்கு தேவன் இரட்டைக்குழந்தை பாக்கியம் நல்கினார். விபத்தினின்று தேவன் நமது சுதேச ஊழியர் சுனிலையும் அவரது மனைவியையும் பாதுகாத்தார். போலா நகர் மற்றும் ரசுலாபாத் பகுதியில் நமது புதிய விசுவாசிகள் தவறாமல் ஆராதனைக்கு வர தேவன் காட்டுகிற கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லகதா கிராம ரஜனி மனக் கோளாறிலிருந்தும், அனில் குமார் முதுகுத்தண்டுவட வலியிலிருந்தும் சுகமடைய; காஜிரி கிராம கியூதா மற்றும் சமார் இன மக்களின் ஆத்தும இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

### கான்பூர் பிராந்தியம்:
**ஸ்ரீனிவாசன் & ஷீபா .G**

**துதிக்க:** கைம்கன்ஜ் பணித்தளத்தில் நமது ஜீப்குழு ஊழியத்தின் மூலம் புதிதாக 15 கிராமங்களில் சுவிசேஷத்தைப் பறைசாற்றவும், 9 கிராமங்களில் இயேசு திரைப்படம் காட்டவும் தேவன் ஒத்தாசை அருளினார். எல்லாப் பணித்தளங்களிலும் பெண்கள் தின சிறப்புக்கூடுகை, சபை மூப்பர் பயிற்சிக் கூடுகை மற்றும் குடும்பக்கூடுகை யாவையும் சிறப்பாக நடத்தி முடிக்கவும், அதன் மூலம் அநேகர் பயனடையவும் தேவன் கிருபை செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பகுவா பகுதியில் நமது ஜீப் குழு ஊழியம் தீவிரமடையவும், அக்குழு ஊழியர்களைத் தேவன் பாதுகாக்கவும்; காட்டம்பூர் மற்றும் டூண்ட்லா பகுதிகளில் வைத்து நடைபெறப்போகும் சபை மூப்பர்களின் பயிற்சிக்கூடுகைகள் ஆசீர்வாதமாக அமைய; மத்திராம்பூர், ரசுலாபாத் ஆகிய இடங்களில் நடந்து கொண்டிருக்கும் ஆலயம் மற்றும் அதன் சுற்றுச்சுவர் கட்டுமானப் பணிகள் யாவும் தடையின்றி நடைபெற; ஆலய சபை மூப்பர் குழு மற்றும் சபை நிதி வரவு செலவு கணக்கு பராமரிப்பு போன்ற அமைப்பு முறைகளை எல்லாத் திருச்சபைகளிலும் அறிமுகப்படுத்தி, செயலாக்கம் செய்திட ஜெபிப்போம்.

மே
11
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ்
திருமதி. ஜோன்ஸ் ஸ்வீட்லின் பால் டேனியல்
திரு. ஆனந்த குமார் செல்வராஜ் V
செல்வி. ஜின்சி

### சிக்கந்ரா: பொன்னுசாமி & சித்ரா

**துதிக்க:** புதிதாக கோரவா, கலாகோன், கோர்வா, ஹூத்துமா ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் பறைசாற்றப் பட்டுள்ளன. ஹரிஹர்பூர், அனந்தபூர் ஆகிய கிராமங்களில் சிறப்பு ஜெபக்கூடுகைகள் நடத்த தேவன் அநுக்கிரகம் ஈந்தார். விகாஷ்நகர் மற்றும் பந்தேமு போன்ற யிடங்களில் இயேசு திரைப்படம் திரையிடப் பட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனலுவாக்கபூர்வா மற்றும் சில்ஹாரா கிராமங்களில் நடந்துக் கொண்டிருக்கும் ஆலயக்கட்டிட சீரமைப்புப் பணிகள் யாவும் திருத்தமாக நடக்க; நரம்பு பெலவீனத்திலிருந்து பூபால், பலவித சுகவீனங்களிலிருந்து சுனிதா ஆகியோர் நற்சுகம் பெற; முக்பில்பூர் கிராம நமது விசுவாசி நந்தினி கடன் சுமை யிலிருந்து மீள; நமது புதிய விசுவாசிகள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிடுவதற்குத் தடையாக வரும் சவால்களைத் துணிச்சலுடன் மேற்கொள்ள ஜெபிப்போம்.

### கைம்கஞ்ச்:
### எபநேசர் ஜி. சாம் & ஜெபராணி

**துதிக்க:** புதிதாக 15 கிராமங்களில் இயேசு வின் அன்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பார்வா கிராமத்தில் சிறுவர் ஊழியம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 7 கிராமங்களில் முதன்முறையாக இயேசு திரைப்படம் திரையிடப்படவும், அதன் மூலம் ஏராள மானோர் இயேசுகிறிஸ்துவின் தூய அன்பைப் புரிந்து கொள்ளவும் தேவன் உதவி செய்தார். நமது ஜீப்குழு ஊழியத்தை தேவன் பலவிதங்களில் பாதுகாத்து வழிநடத்தி வருகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முதன்முறையாக நற்செய்தியைக் கேட்டிருக்கும் 15 கிராமங்களில் வசிக்கும் யாதவ் மற்றும் ராஜ்புட் இன மக்களின் இரட்சிப்பிற்காக; அல்லாபூர் கிராம மெய் பால் சிங், சாந்த்பாலி மற்றும் அஜாம்பூர் கிராம சிவபால் ஆகியோர் புகையிலை பயன்படுத்தும் பழக்கத்திலிருந்து விடுதலை பெற; ரமாபூர் தபித் கிராம பிரேம்லதாவின் குடும்பத்தில் தேவசமாதானம் பொங்கி வழிய ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### சிரியா: ஏகலைவன் ஜேம்ஸ் & பெரில்

**துதிக்க:** புதிதாக 22 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. புதிதாக 12 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். பதின்மூன்று வருடங்களாகத் தீராத கால் வலியிலிருந்து ஜகநாத்புரா கிராம லிதியை தேவன் சுகப்படுத்தினார். தேவதா கிராமத்தில் ஒரு ஆராதனைக்குழு தொடங்கப்பட்டுள்ளது. சாமர்பட் கிராமத்தைச் சார்ந்த சாந்தாவைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிப்பழக்கத்தினால் தனக்கு அருகாமையில் வசிப்போருக்குத் தீங்கு விளைவிக்கும் கப்ரி கிராம புரூஸ்லி இரட்சிக்கப்பட; கார்கடி கிராம ஜாலுவைக் காது கேளாமையிலிருந்தும், குர்தியைக் குடலிறக்கப் பிரச்சனையிலிருந்தும், நிம்கதி கிராம நிலேஷைக் காசநோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

**மே 12 புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. குமார் பால் K

திரு. மித்லேஷ் தீப்ரத்னா

## உதய்நகர்:

### டி. வில்சன் & ரஷ்மித்தா பரிடா

**துதிக்க:** புதிதாக 14 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. புதிதாக 13 நபர்கள் இயேசுவின் அன்பிற்குள் வந்துள்ளனர். குத்கல் கிராம காலுவைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் காப்பாற்றினார். ஹாட்பி பிலியா என்ற கிராமத்தில் சுவிசேஷ வாசல் திறக்கப்பட்டு, அநேகர் சுவிசேஷத்தைக் கேட்டறிகின்றனர். குத்கல் கிராமத்தில் வாழும் பீல் மற்றும் பரேலா இனமக்கள் சுவிசேஷத்தை மிகுந்த வாஞ்சையுடன் கேட்கின்றனர். பல புதிய கிராமங்களில் வெளிசந்திப்பு ஊழியங்கள் சுமூகமாக நடைபெற தேவன் கிருபை செய்து வருகிறமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரூமாவைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; பொட்டா கிராமத்தில் நமது ஊழியத்திற்கு இருக்கும் தடைகள் நீங்க; நமது ஊழியத்தில் இணைய விரும்பும் சோகிபொஹலா கிராமத்தைச் சார்ந்த ஜீவன் என்பவரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

## கர்கோன்: சாமுவேல் மராண்டி, ஏபேல் ஹெம்ரோம்

**துதிக்க:** புதிதாக 12 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக 9 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்கியுள்ளனர். வாலிபர் மற்றும் சிறுவர் முகாம்களை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். லோனாரா கிராம குர்தி மற்றும் கரடியா கிராம சிதியை தேவன் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவித்தார். தேவஜ்கெரி கிராம ரோஸ்னியை தேவன் கொடிய சரீர வலியிலிருந்து சுகப்படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அரசாங்க நிலத்தில் வீடு கட்டி வாழும் பத்யான் கிராம நமது விசுவாசிகளுக்கு அரசாங்கத்திடமிருந்து வீட்டைக் காலிசெய்ய வரும் நெருக்கடிகளுக்கு அவர்கள் தப்பிப்பிழைக்க, அவர்களுக்கு வேறு தகுந்த நிலங்கள் கிடைக்க; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; பாதர்வாடா, பொக்ராமியா மற்றும் சிலோட்டியா கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்படுவதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

## பால்: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** புதிதாக 7 கிராமங்களில் முதன்முறையாக இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 4 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். சில மாதங்களாகக் காணாமல் தொலைந்து போயிருந்த நமது விசுவாசி ராமாவின் சகோதரர் ஜெபத்தின் மூலம் மீண்டும் வீடு திரும்பினார். பூர்ண துமட்டா பகுதியில் புதிய ஆராதனை மையம் துவங்க தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி பாலியாவைத் தீராத எலும்புப்புரை வியாதியிலிருந்தும், தாந்துவித்தைச் சரீர வீக்கத்திலிருந்தும், வருபாயைக் காதுகேளாமை மற்றும் வாய்ப் பேசாமையிலிருந்தும் தேவன் விடுவிக்க; பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகளான ராஜேஷ் பாவ்ரா, ஜெயா, பெசலிபாய் ஆகியோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; பிரேம்சிங், ரிங்கு, ராஜேஷ்பில் மற்றும் மனிஷாவின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

## மே 13 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ராபர்ட் வில்லியம் L, திரு. ஆல்பின் T
திரு. மித்ரன் E, திரு. ரமேஷ் வேல்ராஜ் A
திரு. முத்தையா U. சாமுவேல், திரு. நெகேமியா
திருமதி. பங்கஜம் ஹரிபாபு குந்த்ரா
திருமதி. ஹேனா மேரி ஸ்லெஸர் ராஜேந்திரன்

### நேப்பாநகர்:

**ஜுபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்**

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 5 நபர்கள் இயேசுகிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். பறவை காய்ச்சல் நிலவி வந்த நேரத்திலும், தகுந்த விலைக்குத் தனது பிராய்லர் கோழிகளைச் சந்தையில் விற்க தேவன் நமது விசுவாசி பவார் சிங்கிற்கு உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நவ்ரா மற்றும் பில்கெடி கிராமங்களில் சுவிசேஷத்திற்கான திறந்த வாசல் கிடைக்க; சரீர வெள்ளைப்படுதலிலிருந்து ஆர்த்தியையும், பக்கவாதத்திலிருந்து செயின்புரா கிராம பானுசிங்கையும் தேவன் சுகப்படுத்த; தஸ்கோட் கிராம நமது விசுவாசி வசந்திபாயிற்கு தேவன் மழலை பாக்கியம் கொடுக்க; ஆழ்துளைக்கிணறு தோண்ட திட்டமிட்டிருக்கும் பத்தினாபூர் கிராம நமது விசுவாசி சோனாருக்கு தேவன் ஏற்றளவு நிலத்தடி நீரைக் கட்டளையிட ஜெபிப்போம்.

### கோராடுங்ரி:

**எஸ். ரவி & சாரோன் ரோஸ்**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது ஊழியத்தை எதிர்த்து வந்த கோராடுங்ரியைச் சார்ந்த மோஹித் துர்வேவை தேவன் அவருக்கு ஏற்பட்ட இனந்தெரியாத வியாதியிலிருந்து சுகப்படுத்தினார். பொருளாதார தேவையிலிருந்த பெத்துல் கிராம நமது விசுவாசி மனோதிற்கு அவரது பக்கத்து வீட்டாரின் மூலம் தேவன் அத்தேவையைச் சந்தித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜாமியாவைப் புற்றுநோயிலிருந்து தேவன் சுகப்படுத்த; விபத்தினாலுண்டான மரணத்தினிமித்தம் ஓம்பிரகாஷ் மற்றும் நிர்மலாவை இழந்திருக்கும் அவர்களது குடும்பத்தார் மனஆறுதலடைய; கன்டாங்கி கிராம சில்தா நாகவன்சி, சாலிதானா கிராம பாகரதி, துலேரா கிராம ஓஜாபாய், பெத்துல் கிராம பூரி ஆகிய நமது விசுவாசிகள் ஆராதனைக்குக் கிரமமாக வர; நமது வாலிப ஜெபஐக்கியக் கூடுகையிலிருந்து பிரிந்து சென்றுள்ள சுனிதா இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

### தார்: கருணாகர் கர்டா & கீதாஞ்சலி பெஹெரா

**துதிக்க:** கக்கடா கிராமத்தில் கடும் எதிர்ப்புகளின் மத்தியிலும் நமது ஆராதனையை சுமூகமாக நடத்த தேவன் கிருபை செய்து வருகிறார். கத்தாரில் வைத்து நடக்கும் நமது ஜெபக்கூடுகையில் புதிய மக்கள் வந்து பங்குப்பெறுகின்றனர். தார் பணித் தளத்தில் அதிக எதிர்ப்புகள் ஊழியத்திற்குத் தடைகளாக இருக்கின்றபோதிலும், நமது ஜெபக்குழுக்கள் சமாதானத்துடன் இயங்க தேவன் பலத்த கிரியை செய்து வருகிறார். வெளிசந்திப்பு ஊழியத்தில் நமது விசுவாசிகளனைவரும் உற்சாகமாக ஈடுபடுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஆலய ஆராதனையில் புதிதாக வந்து கலந்து கொள்ளும் மக்களின் இரட்சிப்பிற்காகவும், அவர்களது ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும்; பாகடி மற்றும் பத்தடா பகுதிகளில் நமது ஆலய ஆராதனைகள் தடையின்றி நடைபெற; இரத்தப் புற்றுநோயிலிருந்து அனிதாவிற்கு சுகம் கிடைக்கவும், நமது விசுவாசிகளான ஆகாஷ் & ரமித்திற்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கவும் ஜெபிப்போம்.

மே
14
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஞானபுஷ்பம் அருள்ராஜ்
திரு. வினோத் குமார் சிங், திரு. ரவி K
திருமதி. மமதா J V. திம்மண்ணா
செல்வி. ரூத் மால்தோ

## ஜார்க்கண்ட்

### தல்பும்கட் விடுதி: வகேரா பிரமோத் குமார் & ஜஷோதாபேன்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. புதிதாக 7 நபர்கள் கிறிஸ்துவின் சிலுவையினண்டையில் தஞ்சமடைந்துள்ளனர். நமது விசுவாசி களனைவரும் கிறிஸ்துவில் வளர்ந்து வருவதோடு, கர்த்தரின் வார்த்தையைக் கற்றுக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். நமது சிறுவர் விடுதிகள் யாவும் மீண்டும் திறக்கப்பட்டு, பிள்ளை களுக்குப் பாடவகுப்புகள் நடைபெற தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 12-ம் வகுப்பு அரசாங்கப் பொதுத்தேர்வு எழுதக் காத்திருக்கும் பிள்ளைகளுக்காக; பக்ராகோச்சா பகுதி ஆலயக்கட்டுமானப்பணி சிறப்பாக நடக்க; இப்பணித்தளத்திலுள்ள நமது விசுவாசிகளை ஆவிக்குரிய நல்லொழுக்க வாழ்விற்கு நேராக வழிநடத்திப் பராம ரிக்க, உடனடியாக நல்ல அர்ப்பணிப்புள்ள சுதேச ஊழியரொருவரின் குடும்பம் இங்கே பணியமர்த்தப்பட; நமது விசுவாசிகளைக் குறிப்பாக சுந்தர்திஹ் திருச்சபையினரை, அவர்களது திருச்சபைகளுக்குத் திசை திருப்பிக் கொண்டு செல்லும் பிற மிஷனெரி இயக்க ஊழியர்கள் மனம்மாற; நமது விடுதிப்பிள்ளைகள் யாவும் சுகநலத்துடன் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

### ஜகன்நாத்பூர் பிராந்தியம்: கணேஷ் & சுமதி

**துதிக்க:** புதிதாக 56 நபர்கள் கிறிஸ்து வைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். 24 மணி நேர உபவாச ஜெபத்தை தேவன் ஆசீர்வதித்துத் தந்ததோடு, அநேக நமது விசுவாசிகள் கிறிஸ்துவில் ஏகோபித்து வளரவும் உதவி செய்கிறார். கர்த்தரின் பெரிதான கிருபையால் நமது விசுவாசிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் மிஷனெரிகள் யாவரும் இம்மட்டும் ஆரோக்கியமாய் ஜீவித்துக் கொண்டிருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புக்ரிபீ பகுதி ஆலயக்கட்டு மானப்பணி யாவும் வெற்றிகரமாக நிறை வடைய; வருகிற நாட்களில் நடக்கவுள்ள தேடுவோர் முகாம், முக்கிய தலைவர்கள் பயிற்சி நிகழ்ச்சி போன்ற பல்வேறு ஆவிக்குரிய கூடுகைகள் யாவும் தடையின்றி ஆசீர்வாதமாக நடைபெற; நமது படாஜாம்டா விடுதிப்பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நமது சபை மூப்பர் ரிங்குவின் நிலப்பிரச்சனை சமாதானமாக முடிவடைய ஜெபிப்போம்.

### *சுவிசேஷத்திற்குத் திறந்த வாசல்!*

*மத்தியப் பிரதேசம், பால் பணித்தளத்திலுள்ள ருன்தா கிராமத்தில் 16 குடும்பங்கள் உள்ளன. கடந்த 8 வருடங்களாக நாம் அங்கே ஊழியம் செய்தும் பயனில்லாமல் இருந்த நிலைமாறி, கடந்த வருடம் 3 குடும்பங்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். தற்போது அங்கே சுவிசேஷத்திற்குத் திறந்த வாசல் காணப்படுகிறது. இக்கிராமத்தினரின் இரட்சிப்பிற்காக நாம் தொடர்ந்து ஆண்டவரிடம் மன்றாடுவோம்.*

**மே 15 சனி**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜான்சி ராஜேந்திரன்
திரு. தாமஸ் மேத்யூ, திரு. பாபு புஷ்பராஜ் D
திருமதி. சாந்தி ஞானப்பண்டிதன்
திருமதி. ஜெயா வயோலா மாணிக்கம்
திரு. டைட்டஸ் பாபு பொலவரப்பு
திருமதி. செல்வராணி பரணிதரன்
திருமதி. லட்சுமி வேடியப்பன், திரு. பிஜு லால்
திரு. பாகிரதி பிசோயி, திரு. கிம்பல் திலீப்பாய் ரகுபாய்
திருமதி. சுரிதிகா தினேஷ், திரு. சுரேஷ் மால்தோ S

### லால்மட்டியா:

**அமரேந்திரன் & சுவேதா**

**துதிக்க:** பாபூன் கிராமத்திலிருந்து புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். இப்பணித்தள வெளி சந்திப்பு ஊழியத்திற்கென ஒரு தன்னார்வ ஊழியர் கிடைத்துள்ளார். கைபேசி கூட்டிணைப்பின் மூலம் தினந்தோறும் அதி காலை 4 மணிக்கு நடைபெறும் ஜெபத்தில் ஏறத்தாழ 10 குடும்பங்கள் தவறாமல் பங்குப்பெறுகின்றனர். மந்திரஜால வித்தை மற்றும் அதனால் உண்டாகும் பயம் யாவற்றிலுமிருந்து சாமுவேல் டுடுவின் குடும்பத்தை தேவன் அற்புதமாக மீட்டார். ஜுனியா கிராம ஹசிகா டுடுவைத் தீராத முதுகுவலியினின்று தேவன் சுகப்படுத்திய தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாபூன் கிராமத்தில் புதிதாக ஆராதனைக்குழுவொன்று அமைக்கப்பட; ஜப்தி கிராமத்தில் சுவிசேஷ வாசல் திறக்கப்பட; கிறிஸ்தவ நம்பிக்கையின் மீது எதிர்மறையான எண்ணங்கொண்டிருக்கும் பஜ்நாத்பூர் மக்களின் மனதில் தேவன் நற்தெளிவைக் கட்டளையிட; சாராயம் தயாரிப்பதைத் தொழிலாகக் கொண்டு தங்களது வாழ்வாதாரங்களை நடத்திக் கொண்டுப்போகும் நமது ஹர்கட்டா கிராம விசுவாசிகள் யாவரும் அத்தொழிலை விட்டுவிட்டு, வேறு தொழிலுக்கு மாற தேவன் அவர்களுக்கு நல்வழி காட்ட ஜெபிப்போம்.

## *வீதிகளில் உறங்கி, உள்ளங்களைக் கிறிஸ்துவுக்காகக் கொள்ளையடித்தோர்!*

*மகாராஷ்டிரா, டெக்கான் பணித்தளம். 1990-ம் ஆண்டின் ஆரம்பக்காலங்களில், நமது கட்சந்தூர் முன்னோடி மிஷனெரிகள் காத்கி கிராம ராஜ் கோண்ட் இன மக்கள் மத்தியில் முதல்முறையாக இரவுநேர ஜெபக்கூட்டங்களை நடத்த ஆரம்பித்தனர். அப்பொழுது இரவில் ஜெபக்கூட்டங்கள் நிறைவு பெற்றப்பின், யாரும் தங்களைத் தங்களது வீடுகளுக்குள்ளாகத் தங்குவதற்கு ஏற்காத வேளைகளில், நமது மூத்த மிஷனெரி சகோதர, சகோதரிகள் வீதிகளிலேயே தங்களது சிறுபிள்ளைகளுடன் உறங்கியெழுந்து ஊழியம் செய்து வந்தனர். அதன் விளைவு, ஊழியங்களில் தேவ அற்புதங்கள் நிகழத் துவங்கி, ஒரு மந்திரவாதியின் குடும்பம் உட்பட, ராஜ் கோண்ட் இன மக்களில் ஒரு சிலர் நமது உயிருள்ள மெய் தேவனை ஆராதிக்கத் தொடங்கினர். ராஜ் கோண்ட் இன மக்கள் சிறியளவிலேயே அப்போது இயேசுவை ஏற்றுக்கொண்டாலும், காத்கி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து அநேக மக்கள் அலையலையாக ஆண்டவருடைய ஆச்சரியமான ஒளிக்குள் வந்தனர். எனவே, அங்குள்ள கிராம பஞ்சாயத்து அக்கிராமத்தி லேயே ராஜ் கோண்ட் இன மக்களுக்கென ஆலயம் கட்டுவதற்கு ஓர் நிலத்தை இனாமாக ஈந்தது. ஆலயமும் தேவ நாம மகிமைக்காகக் கட்டப்பட்டது. உண்மை தேவனின் அதிசய கிரியைக்காகக் கோடாகோடி ஸ்தோத்திரம்!*

**மே**

**16**

**ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வில்சன் D, திரு. எபனேசர் G. சாம்
திருமதி. சினிக்தா மோகினிதேவி ஜீவன் ரஞ்சன்
திருமதி. கிறிஸ்டி ஜெயந்தி, திரு. சாமுவேல் ஆனந்த்
செல்வி. கொராஜங்கி ஸ்ரீதேவி

## புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளி, சிறுவர்கள் விடுதி & CDC பந்தேனி : விக்டர் ஜெயசீலன் & நகோமி

**துதிக்க:** 8-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை படிக்கும் பிள்ளைகளுக்குத் துணைக் கல்வி பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. காலமாற்றுச் சூழ்நிலையினால் உண்டான வயிற்றுப்போக்கிலிருந்து பாதிக்கப்பட்ட அனைத்து பிள்ளைகளையும் தேவன் மீண்டும் சுகம்பெற உதவி செய்தார். நமது விசுவாசி ஜாண் மால்தோ தெதலிபிட்டா கிராமத்தில் ஓர் ஆலயம் கட்ட தனது நிலத்தை இனாமாகத் தர முன்வந்துள்ளமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜார்க்கண்ட் கல்வி ஆலோசனைக்குழு நடத்தத் திட்டமிட்டுள்ள 10-ம் வகுப்பு பொதுத் தேர்விற்கென ஆயத்தமாகும் நமது 13 பிள்ளைகளுக்காக; கிரண் உயர்நிலைப்பள்ளி நடத்தும் நிகழ்நிலை பாடத்திட்டத்தில், 12-ம் வகுப்புப் படிக்கும் நமது விடுதிப்பிள்ளைகளான டேனியல் பெல்பதாரி, மஸிஹ் பட்வாரி, பிரேம்தாஸ் லோர்பச்சோ, தரம்ராஜ் நதுகோடா, முக்தி சாண்டிகோலா, பத்ரஸ் சாண்டிகோலா ஆகியோர் தவறாமல் இணைந்து கொண்டு கல்விப்பயில; பிஷப் ஹீபர் கல்லூரி நடத்தும் வணிகவியல் இளநிலை படிப்பிற்கான நிகழ்நிலை கல்வித்திட்டத்தில் நமது விடுதிப்பிள்ளைகளான ரீஸ் மால்தோ, மார்கஸ் மால்தோ, ஜாண் மால்தோ ஆகியோர் தவறாது கலந்து கொண்டு பயனடைய; மால்தோ பிள்ளைகளுக்கென நடத்தத் திட்டமிடும் ஜார்க்கண்ட் திகி பள்ளி பயன்பாட்டை (APP) நடைமுறைக்குக் கொண்டு வர தேவன் உதவி செய்ய; இப்பள்ளி CBSE கல்வித் திட்டத்தில் இணைவதற்கான முயற்சிகள் யாவும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட ஜெபிப்போம்.

## ராம்கார்: செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** புதிதாக 20 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. புதிதாக 17 நபர்கள் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கத் துவங்கியுள்ளனர். கிந்துவா பணித்தளத்தில் ஓர் ஆலயம் கட்ட ஒரு சபை மூப்பர் தனது நிலத்தைப் பரிசாக அளித்துள்ளார். நமது சுதேச ஊழியர் அசோக்கின் குடும்பத்தை தேவன் பெரிய விபத்தினின்று பாதுகாத்தார். நமது புதிய விசுவாசிகள் ஆஸ்நாத் கிராம ஆராதனையில் இணைந்து தேவனை ஆராதிக்கின்றனர். ஒரு வருடத்திற்குப் பின் மீண்டும் நமது பகல் பராமரிப்பு மையத்தைத் திறக்க தேவன் கிருபை செய்திருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரூபின், சுரேந்தர், லீல்முனி ஆகியோர் மனநிலை கோளாறிலிருந்தும், நமது விசுவாசிகளில் பலர் வலிப்பு நோயிலிருந்தும், பக்கவாதத்திலிருந்தும், காசநோயிலிருந்தும், பற்பல வியாதிகளிலிருந்தும், நமது சுதேச ஊழியர் சுலைமான் விபத்தினாலுண்டான முழு சரீர காயத்திலிருந்தும் சுகமடைய; நமது ஊழியத்தை எதிர்க்கும் மகேந்தர் டுடு மனம் மாற; கிந்துவா ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

## மே 17 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆசீர் T Y P
திருமதி. உல்தாள் மேகி எஸ்தர் தாமஸ்
திருமதி. வசந்தி ஜெபக்குமார்
திருமதி. ஞான ஜெபஷீலா டேனியல் அருள்மணி
திரு. முதாவத்து ராஜு நாயக்

### சந்தால் மேம்பாட்டு ஊழியம், சிறுவர் பராமரிப்பு & பகையா சிறுவர் விடுதி:

**பீட்டர் பிரபாகரன் & விமலா**

**துதிக்க:** நமது மெர்ஸி விடுதியில் 7-ம் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புப் பிள்ளைகள் யாவரும் பள்ளிக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர். தாதியர் படிப்புப்படிக்கும் நமது விடுதிப்பிள்ளைகளான சலோமி மற்றும் ஜெயந்திக்கு அரசாங்கக் கல்வி நிதியுதவி கிடைத்துள்ளது. பல மாதங்களுக்குப் பின் தற்போது நமது பத்னா சிறுவர் விடுதி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. மண்ட்ரோ சிறுவர் பராமரிப்பு மையத்திலுள்ள சாகு முர்மு தனது கல்வித்தேர்வில் சிறந்த மதிப்பெண்களைப் பெற்றுள்ளான். நமது அமரபாடா சிறுவர் பராமரிப்பு மையத்தைச் சார்ந்த பிங்கி பிரியா தனது B.Com., பட்டப்படிப்பைச் சிறப்பாக முடித்துள்ளார். நமது பெல்திஹா சிறுவர் பராமரிப்பு மையத்தைச் சார்ந்த பிள்ளைகள் யாவரும் சந்தாலி மொழியை நன்கு கற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது மெர்ஸி விடுதிக்குத் தேவையான சமையலறை மற்றும் உணவருந்தும் அறைகளைக் கட்டுவதற்கான நிதித்தேவைகள் சந்திக்கப்பட; நமது சாந்தனா சிறுவர் விடுதிக்குப் பொறுப்பான காப்பாளர் கிடைக்க; தங்களது பள்ளிப்பாடங்களைச் சரியாகப் படிக்க இயலாமல் தவிக்கும் நமது பிள்ளைகளுக்கு தேவன் தகுந்த உதவிகள் கிடைக்கச் செய்ய; நமது மெர்ஸி விடுதியின் பேருந்து வசதிக்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

### தெலோ: பால்ராஜ் & ஜெபஜோதி

**துதிக்க:** புதிதாக 39 நபர்கள் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்க ஆரம்பித்துள்ளனர். பாஸ்கோவில் நடைபெற்ற பணித்தள அளவிலான ஆவிக்குரிய இரவுக்கூட்டத்தையும், மந்துவா, கோர்டியா, புரோடி, மர்ச்சய் ஆகிய இடங்களில் நடைபெற்ற விசுவாசிகள் கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். சன்போனா கிராம மோசஸ் ஹெம்ரோம் மனக்கோளாறிலிருந்து சுகமடைந்தார். பாரமசியா கிராம சாஹிம்ராம் சோரேன் குடிப்பழக்கத்திலிருந்து மீள தேவன் உதவி பாராட்டியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மர்ச்சய் கிராம நமது புதிய விசுவாசி பிரவின் டுடு காசநோய் மற்றும் முழுசரீர வீக்கத்திலிருந்தும், ஜுருல் பகுதி சானிலி பஸ்கி மனவளர்ச்சியின்மையிலிருந்தும், பத்லோஹாரா கிராம ரோஸ்மிலா முர்மு நரம்பு பிரச்சனையிலிருந்தும், 5 வயது சிறுமியான ஹப்லி முர்மு பக்கவாதநோயிலிருந்தும் சுகம் பெற; பிசான்பூர், தல்ஜாரி, குட்டிபேடா, தாத்ராபூர் ஆகிய கிராம விசுவாசிகள் யாவரும் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட; சில மாதங்களாகக் காணாமல் போயிருக்கும் புக்ரியா கிராம ஜும்ரி ஹெம்ரோம் மீண்டும் தனது வீடு வந்து சேர ஜெபிப்போம்.

## மே 18 செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜெயந்தி பொன்னுராஜ்
திருமதி. ராஜம்மாள் ஜாண்சன்
திருமதி. எலிசபெத் சாலமோன்
செல்வி. கோன்கனி சந்திரிகாபேன் சாஹன்பாய்
திரு. ஸ்டீபன் R, திரு. முத்துக்குமார் M
திருமதி. பொற்செல்வி ஃபெலிக்ஸ் கமாலியேல்
திருமதி. ரீட்டாஞ்சலி கராடா ஹமுவேல் லிம்மா
திருமதி. ஷீபா வெங்கடேஷ் வடார்
திரு. கவித் ராகேஷ் ரத்திலால், திருமதி. எமி குளோரி
திருமதி. ஜாண்சி ராணி யுவனேஷ்
திருமதி. சிங் கான் மாவி தங்வன்சங்

### தம்னி :

**ஜாண்பால் ஹேரீஸ் & விமலா டெய்சி**

**துதிக்க:** பத்பஹாடி ஆலயசேகரத்தைச் சார்ந்த மாஸ்பரி கிராமத்திலிருந்து புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவண்டை வந்துள்ளனர். குந்திகோடா கிராம சாந்தி மால்தோவை இரத்த இழப்பிலிருந்து தேவன் குணமாக்கினார். தம்ரு, கெய்ராஜுடி, தம்னி, பதரியா ஆகிய கிராம விசுவாசிகள் யாவருக்குமாகச் சேர்த்து வைத்து நடத்திய விசுவாசிகள் மேளாவை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்ததோடு, 700-க்கும் மேற்பட்டோர் இயேசுவின் அன்பை ருசிப்பதற்குமான அரிய வாய்ப்பாகத் தந்தருளினார். காதி பகுதியில் தேவ வார்த்தையைச் சரியாய்ப் போதிப்பதற்கும், வேதாகம வகுப்புகளை நடத்துவதற்கும் நமது சுதேச ஊழியர்களுக்கு ஏற்றப்பயிற்சி கொடுக்க தேவன் கிருபை ஈந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; குத்தமு கிராம ஆலயக்கட்டுமானப் பணியும் குந்திகோடா கிராம ஆலயப்பூச்சுப் பணியும் சிறப்பாக நிறைவு பெறவும், அப்பணிக்குத் தேவைப்படும் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கவும்; விசுவாசிகளுக்கு இன்னல் விளைவிக்கும் தும்ரிகக்ரி கிராமத்தலைவர் தர்மா பஹாடியா மனம்மாற ஜெபிப்போம்.

### படிட்டோலா:

**ஜீவன் ரஞ்சன் & ஸ்னிக்தா**

**துதிக்க:** புதிதாக 17 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசித்துள்ளனர். போத்பான்ட் கிராமத்தில் வைத்து நடந்த பணித்தள அளவிலான கன்வென்ஷன் கூட்டம் ஆசீர்வாதமாக அமைந்தது. 41 இடங்களில் இரவுநேர நற்செய்திக்கூட்டங்கள், 32 இடங்களில் விசுவாசிகள் முகாம்கள், 21 இடங்களில் பெண்கள் முகாம்கள், 11 இடங்களில் சிறுவர் முகாம்கள், 5 இடங்களில் வாலிபர் முகாம்கள் யாவும் சிறப்பாக நடத்தப்பட்டதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** படிட்டோலா பணித்தளம் முழுவதும் தன்னிச்சையாக இயங்க; தற்போதைய சபை ஒழுங்குப் பணிகளையும், வருங்காலத்து வெளிசந்திப்பு ஊழியங்களையும் இப்பணித்தள சபைத்தலைவர்களே தாங்களாக எடுத்துச் செய்ய முன்வர; ஊழியத் திற்கென அர்ப்பணித்திருக்கும் வாலிபர்கள் தங்களது அர்ப்பணிப்பில் இறுதி வரை உறுதியாக இருந்து ஊழியம் செய்ய; அரசாங்கத் தேர்வுக்காக ஆயத்தப்படும் நமது விடுதிப்பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.

மே
19
புதன்
உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜாண்சி பாலாஜி G

திரு. ஹேமந்த குமார் சபார்

# மேற்கு வங்காளம்

## பாலுர்காட்:

### ஹரமோகன் & சூசம்மா

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். ராஜாபூர், பீல்பாடா ஆகிய இடங்களில் 3 நாட்கள் நடத்தப்பட்ட மேளாவை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். தசுல் கிராம கிஸ்குவிற்கு தேவன் குழந்தை பாக்கிய மருளினார். அதிக இரத்தமுத்த வியாதியிலிருந்து சாகரையும், எலும்பு சம்பந்தமான வியாதியிலிருந்து மாயூவையும், கால் புண்களிலிருந்து தாமியையும் தேவன் சுகமாக்கினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முன்சிபூர், பஸ்னாய், அத்கூரி, லெத்தோதங்கா, அரக்தரங்கு, பெல்தா, தான்கி, தெதகிடோலா, கோக்ராம், பீல்பாடா, காசிபூர், துரல்தப்கா, துந்தகாரா, மக்குவா, ஜாரய், மேநகர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; ராஜாபூர், சோலாகுந்தி, பெல்தடா ஆகிய கிராமவாசிகளின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

## ராணிகன்ஜ்:

### துருபராஜ் பெபர்த்தா & புஷ்பாஞ்சலி

**துதிக்க:** புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். நமது சில திருச்சபையினர் கிரமமாக வீடு சந்திப்பு மற்றும் ஜெபக்கூட்டங்களை நடத்தி வருகின்றனர். சாஹர் திகி கிராமத்தில் சுவிசேஷ வாசல் திறக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆத்துமஆதாயப்பணியில் விசுவாசிகளும் ஈடுபட; போதி ஹஸ்தாவும் சாந்தோ சௌரியும் நீரிழிவு நோயிலிருந்து சுகம் பெற; சுமி கிஸ்கு இரட்சிக்கப்பட; நமது சுதேச ஊழியர்களான பெஞ்சமின் ஹெம்ரோம் மற்றும் சூஜன் ஹெம்ரோமின் குடும்பங்களில் மழலை செல்வங்கள் தவழ ஜெபிப்போம்.

## தபன்:

### ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** கலிபதூர் கிராம பனாய் டுடு மற்றும் சிபாலி முர்மு இரவு நேரத்தில் பயங்கர திகில் கனவுக் காணும் நிலையிலிருந்து விடுபட்டனர். வலிப்பு நோயிலிருந்து ஜும்ரி முர்மு சுகமானார். காந்தஹார் கிராம ஆலயக் கட்டுமானப்பணி சிறப்பாக முன்னேறிக் கொண்டிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மொகந்தர் கிராம கோலபி ஹன்ஸ்தா வயிற்றுப் புற்றுநோயிலிருந்தும், முரளிபூர் கிராம சிரிமா ஹஸ்தக் காதுகேளாமை மற்றும் வாய்ப் பேசாமையிலிருந்தும் சுகம் பெற; காந்தஹார் கிராம ஆலயக்கட்டுமானப் பணி சரியான கால நிர்ணயத்திற்குள் கட்டிமுடிக்கப்பட ஜெபிப்போம்.

## மே 20 வியாழன்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. மாதவராய் M
திரு. பொன்னுராஜ் ஜேக்கப் S
திரு. ஸ்டான்லி ஜார்ஜ், திருமதி. எஸ்தர் எசக்கியா
திருமதி. ஞானலின் செல்வ விஜிலா சுந்தர்சிங்
திரு. மிர்ஜ்யோ கிஸ்கு, திரு. இளங்கோவன் S
திருமதி. மினி தாமஸ், திரு. எட்வர்ட் ராஜதுரை R
திரு. தினேஷ் A

### கிழக்கு கங்கை:

**உதிப்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி**

**துதிக்க:** புதிதாக 21 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் அடைக்கலம் தேடி வந்துள்ளனர். மேலும் புதிதாக 6 நபர்கள் நமது ஊழியத்தின் மூலம் நேரடித் தொடர்புக்குள் வந்துள்ளனர். தீய ஆவியின் பிடியிலிருந்து மன்னா மனுதாவையும், தீராத பெலவீனத்திலிருந்து ஆரதி பஹரியாவையும் தேவன் விடுவித்து சுகப்படுத்தினார். எல்லாத் திருச்சபைகளிலும் மீண்டும் ஆராதனை நடந்து வருகிறமைக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தள கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிடப்போகும் நமது விசுவாசிகளான மனுப் சர்மா, ஜெமுஸ் சர்மா, மாமுனி சர்மா, திரிலோக்யா சர்மா மற்றும் ரேச்சல் தாஸ் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

### ஜாம்போனி:

**இப்ராயிம் மாலி & புரோசன்சிதா**

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் பக்கம் நம்பிக்கையுடன் திரும்பியுள்ளனர். ஜாம் போனி பிளாக், தாங்ராம், லால்கார் பிளாக் ஆகிய பகுதிகளில் வெளிசந்திப்பு ஊழியத்திற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டாயிற்று. சில்கிடோ, பெலியா, நாகி, ஹல்தோபோனி ஆகிய கிராமங்களில் நடந்த ஊழியப்பின்தொடர்பணிகளை தேவன் ஆசீர்வதித்துத் தந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெளிசந்திப்பு ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்ற உதால்சுஹா, தாக்குரான் பஹாடி, சாந்த்பிலா மற்றும் லௌதங்கா கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; கிஸ்கு மோகிலால் முர்மு, பன்முனி மர்தி ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; பக்கவாதத்திலிருந்து ரத்னி ஹன்ஸ்தா சுகமடைய ஜெபிப்போம்.

### ஜியாகன்ஜ்:

**எம். ஜாண் & செலினா ஜாய்ஸ்**

**துதிக்க:** கேவாடோலா, துலாதி, கோடிபாடா ஆகிய கிராமங்களில் நடந்த ஊழியப்பின்தொடர்பணிகளையும் கெய்ராபானி மற்றும் காதி பகுதிகளில் நடந்த சுதேச ஊழியர்களின் குடும்பக் கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மேற்கு வங்காளப்பகுதிக்கு உட்பட்ட முர்ஸிதாபாத் மற்றும் நடியா மாவட்டங்களைச் சார்ந்த 20 கிராமங்களிலும், பாலிகிராம், போலாஜிதங்கா, மதுராபூர் மற்றும் சில கிராமங்களிலும் நடக்கவுள்ள தேடுவோர் முகாம்களை தேவன் ஆசீர்வதித்துத் தர ஜெபிப்போம்.

**மே**
**21**
**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. விஜயராணி ஆல்பின்

# அஸோம்

## வடகிழக்கு பிராந்தியம்:
### ஆரோன்சிங் நர்சாரி & ரீனா

**துதிக்க:** தாகு கிராமத்தில் வைத்து நடைபெற்ற இயேசு திரைப்பட ஊழியத்தை தேவன் ஆசீர்வதித்துக்கொடுத்தார்; அதன் மூலம் அன்று 200-க்கும் அதிகமானோர் இயேசுவின் அன்பை முதன்முதலாக அறிந்து கொண்டனர். புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் விசுவாசத்துடன் இணைந்துள்ளனர். ஞாயிறு வேதாகமப் பள்ளி பயிற்சிக்காக 3 நபர்களை நாராயன் பூருக்கு அனுப்பி வைக்க தேவன் பாராட்டிய கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இன்னும் இங்குள்ள பல கிராமங் களுக்குப் புதிதாகச் சுவிசேஷத்தைச் சுமந்து செல்ல அங்கே சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; மக்கோனி குலி மற்றும் மோனியா பாங்கிங்கிற்கு வயிற்று தொற்று கிருமியிலிருந்து பூரண சுகம் கிடைக்க; போர்பந்தா தாகு பகுதியில் கட்டப்பட்டு வரும் ஆலயக்கட்டுமானப்பணி சிறப்பாக நிறைவடைய; கோலி கிராம மக்களனைவரும் கிருபையாய் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## லோக்ரா: லுன்கிம் தோங்காம் கோங்சய் & லிங்டின்கிம் ஹயோகிப்

**துதிக்க:** புதிதாக 10 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையை நுகர்ந் துள்ளனர். கர்த்தர் வாலிபர் முகாமையும் உபவாச ஜெபக்கூடுகையையும் ஆசீர் வதித்துத் தந்தார். அநேக இடங்களில் முதன்முறையாக சிறியளவில் பல ஜெப ஐக்கியக்கூடுகைகளையும், வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளையும் துவங்க கர்த்தர் உதவி செய்ததோடு, அவைகளின் மூலம் அநேக நமது விசுவாசிகள் தங்களது ஆவிக்குரிய ஜீவியத்தில் நன்கு வளரவும் கிருபை புரிகிறார். இசைப்பயிற்சி வகுப்புகளின் மூலம் அநேக வாலிபர்கள் நமது ஊழி யத்தில் தொடர்பு கொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது இளவயது விசுவாசிகளான புதம், சோனியா, இனராணி, நிஷா, புதுல், தோபான் மிலி ஆகியோர் கல்வி கற்பதி லும், சமுதாய வாழ்விலும் சந்தித்து வரும் சவால்களுக்காக; நமது சபைத்தலைவர்கள் தாமாகவே ஆராதனைகளைக் கிரமமாக எடுத்து நடத்த முன்வர; கனோஜியா, செலினா, மிமி, பித்தி ஆகியோர் சுவிசேஷத் தின் மீது நாட்டம் காட்டுவதினால், கிறிஸ்து வின் இரட்சிப்பையும் இவர்கள் கிருபையாய் பெற்றிட ஜெபிப்போம்.

## கோகாமுக்:
### பிரவீன் தாஸ் & மார்கிரெட்

**துதிக்க:** புதிதாக மோயிங் தோரஜா & சயாங் தோரஜா ஆகிய இரு கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவைத் தங்களது உள்ளத்தில் விசுவாசிக்க ஆரம்பித் துள்ளனர். தனித்தாள் ஊழியம் மூலம் 32 நபர்களைப் புதிதாகச் சந்திக்க தேவன் அநுக்கிரகம் ஈந்தார். விசுவாசிகளுக்காகவும் சுதேச ஊழியர்களுக்காகவும் நடத்தப்பட்ட இரண்டு நாட்கள் உபவாச ஜெபக்கூடு கையை தேவன் அபரிமிதமாக ஆசீர் வதித்துத் தந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முதன்முறையாக இயேசுவின் நற்செய்தியைக் கேட்டிருப்போர் யாவரையும் தேவன் கிருபையாய் இரட்சிக்க; செஞ்ஜிலிசுதி கிராமத்தில் கட்டவிருக்கும் சிறிய ஆலயத் திற்கான திட்டத்தை தேவன் ஆசீர்வதித்துத் தர ஜெபிப்போம்.

## மே 22 சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜெயசேகர் P T, திரு. சுனில் தத்தா காரா
திரு. பிபின் பிஹாரி பிரதான், திரு. சாமுவேல் R

### மாஜுலி:

**ரபீந்திர முர்மு & செலினா மராண்டி**

**துதிக்க:** பெக்காமுனி என்ற கிராமத்தில் மூங்கில் மரங்களைக் கொண்டு நல்லதொரு ஆலயம் கட்டிமுடிக்க தேவன் நமது விசுவாசிகளுக்கு உதவி செய்தார். நெற்பயிர் விளைச்சலில் நமது விசுவாசிகள் நல்ல அறுவடையைப் பெற தேவன் காட்டிய கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வடபகுதியில் வாழும் மாஜுலி மக்களுக்கு இயேசுவின் அன்பை அறிவிக்க சுவிசேஷ வாசல் திறக்கப்பட; சந்திக்கப்படாத பகுதி மக்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்க நமது சுதேச ஊழியர்களுக்கு தேவன் உதவி செய்ய; மோலே பெகு மூலப்பிரச்சனையிலிருந்தும், ராதாமணி டோலே வலிப்பு நோயிலிருந்தும், பீனா குலி எலும்புமூட்டு வலிகளிலிருந்தும், பிரியா குலி மாலை கண் நோயிலிருந்தும் அற்புத சுகம் பெற ஜெபிப்போம்.

### சிலபதார்:

**பாகிரதி பிசோயி & லால்மணி டிகல்**

**துதிக்க:** புதிய தன்னார்வ ஊழியர்கள் நமது ஊழியத்தில் இணைய தேவன் ஒத்தாசை புரிந்தார். அகாஜன் பகுதியில் இரண்டு வாலிபர்கள் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றனர். ஜெகதீஷ் மாதக் மற்றும் அகந்தி நோரா தீராத வயிற்று வலியிலிருந்து சுகம் பெற தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மிஸ்ஸிங்பூர், தோங்கனி, அகாஜன், முர்காங், சாப்பூர், மேஷாகி, சீத்தல்மரி, லாமாபோர்குரி, பெக்கிலி, போர்முகுலி ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் யாவரும் இரட்சிக்கப்பட; நமது புதிய தொடர்பாளர்களான அகந்தி நோரா, மோகன் மேதாக், மங்கலு மேதாக், பாபா டோலே, மோகன் டோலே, திபுல் பெகு, சாரு தாயி ஆகியோரின் குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

### ஜோனை:

**சுனில் பிரசாத் சிங் & ஜாய் பெல்லா**

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக 3 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். நமது ஊழியத்தில் ஒரு புதிய தன்னார்வ ஊழியர் கிடைத்துள்ளார். மூன்று இடங்களில் தொடங்கப்பட்ட ஜெபக்கூடுகைகளும், இரண்டு இடங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளும் சுமூகமாக நடைபெற்று வருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுனில் டோலே, மிகோம் டோலே, டோங் சாரோ, ராகேஷ், ஜார்ஜ், ஜாய்கந்தோ நோரா, அரகந்தோ நோரா ஆகியோரது குடும்ப இரட்சிப்பிற்காக; நமது ஊழியத்தை எதிர்க்கும் லுத்தேஷ்வர் பட்டர் மற்றும் அவரது மகன் மனந்திரும்ப; புற்றுநோயிலிருந்து பார்வதி நோரா அற்புத சுகம் பெற; குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கும் வாலிபர்களான பாலிஜன், தோராஜன், சிகா மிஸ்ஸிங் ஆகியோர் அதிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

**மே 23 ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கண்ணுசாமி தாமஸ், திரு. விஜய் பாபு S
திரு. கோபிகிருஷ்ணன் M

### தேமாஜி: நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா

**துதிக்க:** பிடியா என்ற இடத்தில் வைத்து நடைபெற்ற ஊழியப்பயிற்சி நிகழ்ச்சியின் மூலம் 18 பெண்மக்களை அவர்களது ஆவிக்குரிய வாழ்விலும், ஊழிய வாழ்விலும் மேம்புறச் செய்வதற்குரிய பயிற்சிகளை அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்கு தேவன் நமது ஊழியர்களுக்கு தேவஞானம் நல்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மிரி இன மக்களுக்குச் சுவிசேஷம் கடந்து செல்ல; மிஸ்ஸிங் இனமக்கள் மத்தியில் சுவிசேஷ ஊழியம் செய்ய நல்ல தன்னார்வ ஊழியர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

## சத்தீஸ்கட்

### பத்தல்காவ்: பாலமுருகன் & அன்புமலர்

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்கள் சுவி சேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவின் அடியவர் களாயினர். 4 இடங்களில் நடைபெற்ற பஜன் கூடுகைகளையும், 3 திருச் சபையினர்களின் மத்தியில் நடைபெற்ற இரவுநேர ஜெபக்கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 3 இடங்களில் நடைபெறப் போகிற ஒருநாள் கூடுகைகளின் ஆசீர் வாதங்களுக்காக; பலவித நோய்களினால் அவதியுற்றுவரும் நமது விசுவாசிகளின் சுகத்திற்காக; நமது சுதேச ஊழியர் தரம்சாய் எக்காவின் மகன் ஆரியா எக்காவிற்கு மூளையில் தேங்கி நிற்கும் திரவப்பிரச்சனை முற்றிலுமாக நீங்கிக் குணமடைய ஜெபிப் போம்.

### பத்தல்காவ் சிறுமியர் விடுதி: லவ்லின் புன்யா & கிரண் பெங்ரா

**துதிக்க:** தேவகிருபையால், சமுதாய இடைவெளியைக் கையாண்டு 8, 10, 12-ம் வகுப்புப் படிக்கும் நமது விடுதிப்பிள்ளைகள் தங்களது பள்ளிக்குச் சென்று வருகிறார்கள். 36 படுக்கை வசதிகள் மற்றும் நல்ல குடிநீர் வசதிகள் பிள்ளைகளுக்குச் செய்து கொடுக்க தேவன் பாராட்டிய அநுக்கிரகத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிள்ளைகள் ஆவிக்குரிய ஞானம் மற்றும் கல்வி கற்பதற்குரிய அறிவில் சிறந்து விளங்க; பலதரப்பட்ட பெலவீனங்களினால் துன்பப்படும் எஸ்தர், ரியா, மரியம், பிரியா ஆகியோரின் ஆரோக்கியத்திற்காக; பிள்ளைகளின் பெற்றோர்கள் மற்றும் விடுதி ஊழியர்கள் மத்தியிலே ஒற்றுமை காணப்பட ஜெபிப்போம்.

### *ஜெபம் கனியுள்ள வாழ்க்கைக்கு வழிநடத்தியது!*

*ஜீரதண்டா கிராமத்தைச் சேர்ந்த ரேகா, இவர் மகாராஷ்டிராவிலுள்ள தர்ணி பணித்தளத்தில் வசிப்பவர். இவரது குடும்பத்தினர் இவரைப் பிரயோஜனமற்றவர் எனக் கூறி ஒதுக்கி வைத்ததினால், இவர் மிகுந்த கண்ணீருடன் நமது ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தார்; ஜெபத்தைக் கேட்ட கர்த்தர், இவருக்கு ஒரு வழியைத் திறந்தார். மூன்று மாதம் தையல் வகுப்பில் இணைந்து தையல் கலையைக் கற்றுக்கொண்டு, அதன் மூலம் நல்ல வரு மானத்தை ஈட்டினார். இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள இவரது விசுவாசமே இவருடைய கனியுள்ள வாழ்விற்குக் காரணம் என அறிந்த குடும்பத்தினர் இவரைத் தங்களுடன் சேர்த்து கொண்டனர். தேவனுக்கே மகிமை!*

## மே 24 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆனந்தராஜ் S

திரு. வேதமாணிக்கம் அப்பாதுரை

# ஒடிசா

## டேங்கானல்:

### வினோத் குமார் & சனம் ஜாய்ஸ்

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி கூறப்பட்டுள்ளது. புதிதாக 10 நபர்கள் இயேசுகிறிஸ்துவின் மீது தங்களின் நம்பிக்கையை வைக்கத் தொடங்கியுள்ளனர். பொலந்தா கிராம மம்தாவிற்கு இருதய நோயிலிருந்தும், சுரு ஹஸ்தாவிற்கு நெஞ்சு வலியிலிருந்தும் பூரண சுகம் கிடைத்துள்ளது. தெர்மல் ஹட்டிங் கிராம லட்சுமி முண்டாவிற்குத் தீய ஆவியின் பிடியிலிருந்து கர்த்தர் கொடுத்துள்ள விடுதலைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருச்சபையில் இணைந்துள்ள நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சுளியா கிராம மது பிரியா முதுகுத்தண்டுவட பிரச்சனையிலிருந்தும், பொலந்தா கிராம மொகந்தி குங்கல் பக்கவாதத்திலிருந்தும், ரகுவாபில் கிராம ரபி பிங்குவா சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், ரேய்ச்சல் டிகல் தீராத வயிற்றுக்கோளாறிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

## ஜஷிப்பூர்:

### சுகின்லால் & ஜெயராணி

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்களில் கிறிஸ்துவின் சிலுவையன்பைக்குறித்து பறைசாற்றியுள்ளனர். புதிதாக 20 நபர்கள் கிறிஸ்துவின் அன்பிற்கு சொந்தமாகியுள்ளனர். நமது சாக்டி விடுதிக்குப் புதிய மின் ஆக்கி (ஜெனரேட்டர்) வாங்க தேவன் உதவி செய்தார். மொஹசபா பகுதியில் நடந்த ஆவிக்குரிய கூடுகையை தேவன் 750 நபர்களுக்கு ஆசீர்வாதமாக்கித் தந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுமுறை வேதாகமப்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சியின் ஆசீர்வாதங்களுக்காக; லட்சுமி பூர்த்தியின் உடல்நலம் தேற; சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டும் சுரேஷ் சன்தி மற்றும் லம்புரா பூர்த்தியின் குடும்ப மக்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

## பல்லகாரா:

### பாசுதேவ் மால்தோ & பசந்தி மால்தோ

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷ தீபம் ஏற்றப்பட்டுள்ளது. துங்குருதிஹ், ரொடுவா ஆகிய கிராமங்களிலுள்ள பின் மாற்றமடைந்திருந்த நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். அந்தாரி சபை மூப்பரின் குடும்பத்தைக் குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதித்திருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 5 கிராமங்களில் முதன் முறையாக இயேசு திரைப்படத்தைக் கண்டிருப்போர் இரட்சிக்கப்பட; குடிப் பழக்கத்திற்கு அடிமையாக இருக்கும் நமது பாரதேவ்தா திருச்சபை விசுவாசிகள் அப்பழக்கத்தை முற்றிலும் கைவிட; ஜுவாங் சமுதாய நமது வாலிப வயது விசுவாசிகளுக்குத் தகுந்த வாழ்க்கை துணைகளமைய ஜெபிப்போம்.

## மே 25 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஃப்ரீடா பேபி எட்வர்ட் சாம்
திருமதி. ராஜரத்னம் ஆபிரகாம்
திருமதி. கிறிஸ்டா ரவிக்குமார், திரு. சாமுவேல் மராண்டி
திரு. கின்ஸ்லி A R, திருமதி. ஷைலா குப்புசுவாமி

### ராய்ரங்பூர்: சாமுவேல் ஜே. & ஹவிலா பரமானந்த்

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 20 நபர்கள் முதன்முறையாக இயேசுவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். 3 நாட்கள் கன்வென்ஷன் கூட்டங்களை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்துக் கொடுத்ததோடு, அநேகர் தங்களது வாழ்வைக் கிறிஸ்துவிடம் அர்ப்பணிக்கவும் வழிநடத்தப்பட்டமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 7 பஞ்சாயத்து பகுதிகளான மானிக்பூர், லுஹாசிலா, கஹல்தங்காரியா, படாதாலிமா, லுப்புங், பாசனா மற்றும் தாரனாவில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; கர்த்தருக்கென சேவை செய்ய தங்களை அர்ப்பணித்துள்ள 3 குடும்பத்தினர்களும் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்துப் பெருக; விரைவில் லட்சுமி போசி கிராமத்தில் புதிதாக ஒரு ஆராதனை மையம் தொடங்கப்பட ஜெபிப்போம்.

# குஜராத்

### நஸ்வாடி, டபோயி: யுவனேஷ் & ஜான்சி ராணி

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக 9 நபர்கள் கிறிஸ்துவின் அன்பிற்குள் உட்புகுந்துள்ளனர். கடந்த மாதம் எவ்விதப் பிரச்சனையுமின்றி அனைத்து ஊழிய நிகழ்ச்சிகளையும் நடத்தி முடிக்க தேவன் ஒத்தாசை நல்கினார். இம்மட்டும் டுங்ராபீல் மக்கள் மத்தியில் ஒருவருக்கும் கோவிட்-19 தொற்றுக்கிருமி அண்டாதபடி தேவன் காத்துக்கொண்டார். ஏராளமான நோய்களுக்கும், பலவகையான விஷப் பூச்சிகளுக்கும் தேவன் நமது விசுவாசிகளை விலக்கிப் பாதுகாத்து வருகிறமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டுங்ராபீல் மக்கள் தங்கள் வாழ்வில் சமுதாய மற்றும் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் காணவும், அவர்கள் மத்தியில் அதிகமாக நிலவும் தற்கொலை எண்ணங்கள் வேரறுக்கப்படவும்; கலிதியா பகுதியில் நடந்து வரும் விடுதிக்கட்டுமானப்பணிக்காக; தீராத வியாதியிலிருந்து மரியுக்பேனையும், சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து தாரி பேனையும் தேவன் சுகமாக்க; நமது விசுவாசி ஷாலிலேஷ்பாயின் குடும்பத்திற்கு மழலை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

### கடோத்: ராம்சிங்பாய் வசாவா & ஊர்மிளாபேன்

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. சூரத்தி லுள்ள மருத்துவமனையொன்றில் நமது சுதேச ஊழியர் அசோக்பாயின் மகள் பிரீத்திக்கு நல்ல வேலையொன்று கிடைத் துள்ளது. வல்சாத் திருச்சபையினருக்குத் திருவிருந்து ஆராதனை நடத்தவும், அதில் அனைத்து விசுவாசிகளும் ஜெபத்துடன் பங்குப்பெறவும் தேவன் அநுக்கிரகம் ஈந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பல மாதங்களாகக் காணாமல் போயிருக்கும் நமது விசுவாசி சுரேஷ்பாயின் மகன் வீடு திரும்ப; சுவிசேஷத்தின் மீது அதிக ஆர்வம் காட்டும் நட்டுபாய், ரமேஷ் பாய், சுமன்பாய், ஈஸ்வர்பாய், மொகுல்பாய் மற்றும் மகேஷ்பாயின் இரட்சிப்பிற்காக; நமது புதிய தொடர்பாளர்களான மெகு பாய், ரேகாபேன், மகேஷ்பாய் ஆகியோர் தங்களது குடிப்பழக்கத்திலிருந்து மீண்டு வர ஜெபிப்போம்.

## மே 26 புதன்

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. லீலாபாய் ஜாண் பெர்லின்
திருமதி. சிசிலி ஞானம் ராஜ்குமாரி அருமைநாயகம்
திரு. பாபுராஜ் K, திருமதி. ஜெபலா விஜயகுமார்
திருமதி. மைக்கேல் ஜாண் சாமுவேல்
திருமதி. ஹெப்சி செல்வம் தவமணி
திருமதி. தும்படா ராசிலாபேன் ராமுபாய்

### தனக்லா:

### ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா

**துதிக்க:** ஹரிபுரா என்ற கிராமத்தில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சுதேச ஊழியர்களுக்கான பயிற்சிக்கூடுகை, வேதாகம வகுப்புக்குழுக்கள், ‘ஊழியத் தினிமித்தம் உண்டாகும் உபத்திரவங்களை எதிர்கொள்வது எப்படி?’ என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கு, கோக்ரா மற்றும் பிச்சிபுராவில் நடந்த ஊழியப் பின் தொடர்பணி யாவற்றையும் தேவன் ஆசீர் வதித்துக் கொடுத்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்புகளின் மத்தியிலும் விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதி யாய் நிற்க; வாவியாரா கிராம பூம்திபேனை இருதயக் கோளாறிலிருந்தும், சர்காம் கிராம மனிஷாவை மூச்சுத் திணறலிலிருந்தும் தேவன் குணமாக்க; கடுட் கிராம நமது விசுவாசி பூஜாவிற்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; கராலி கிராம கேசுபாயை தேவன் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்க ஜெபிப்போம்.

### மாண்சா: செல்லதுரை & கனகநேசம்

**துதிக்க:** நமது புதிய விசுவாசிகளான சவிதாபேன், லட்சுமிபேன், ரஞ்சன்பேன் ஆகியோர் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருகின்றனர். நமது புதிய தொடர்பாளர்களான பார்மர், சென்மா, தாக்கர், ரவேல் ஆகியோர் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றனர். இங்கு நமது ஊழிய வளர்ச்சிக்குப் போதகர். ஜேம்ஸ் சேவியர் பெரும் உறுதுணையாக இருப்பதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாகரி பகுதி நமது விசுவாசி பிக்குபாய் தனது சொந்த மக்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்த; சிறுநீர் தொற்றிலிருந்து தேவன் மகேஷ்பாயிற்கு அற்புத விடுதலை கொடுக்க; தினேஷ்பாய் மற்றும் மனுபாயின் ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

### சொரம்பா:

### ரமேஷ் கிறிஸ்டியன் & ரேச்சல் ரமேஷ்

**துதிக்க:** ஏறத்தாழ 150 நபர்களுக்கு முதல் முறையாகச் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. நமது ஆராதனையில் காஞ்சிபாய் என்பவர் தவறாமல் கலந்து கொள்கிறார். சர்தாரா கிராம டேனியல், ராகேஷ் ஆகியோரை அதிக கால்மூட்டு வலி மற்றும் தொண்டை வலியிலிருந்தும், சொரம்பா பகுதி பச்சியாபாயைக் கால் சூட்டுக்கட்டியிலிருந்தும், ரெந்தா கிராம ஷமிலாவை உயர் இரத்தழுத்தப் பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக் கினார். நமது விசுவாசி பிலேஷ்பாயின் குடும்பத்தில் தேவன் 2-வது குழந்தை செல்வத்தைக் கட்டளையிட்டமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராசிபுரா கிராம விஷ்வாவை இரத்தச்சோகை நோயிலிருந்தும், கிம்துகாரா கிராம லால்ஜிபாயைப் பக்கவாதத்தி லிருந்தும், தேவலிபேனை அதிக சரீர வலியிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; அரசாங்கப் பொதுத்தேர்விற்கு ஆயத்த மாகும் 10 & 12-ம் வகுப்புப்படிக்கும் நமது பிள்ளைகளுக்காக; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் விசுவாசிகளுக்கான கூடுகைக்காக ஜெபிப்போம்.

## மே 27
**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சைரஸ் சாமுவேல், திரு. ஜோசப் துரைராஜ் P
திருமதி. அருள்மேரி அன்பையா
திரு. சாமுவேல் ஜெபகுமார் A
திருமதி. மாயா சூசன் சுனில் கே. மேத்யூ
திரு. எலிஷா டைம், திரு. டேவிட் R

## ஃபோக்டி தலைமைத்துவ பயிற்சி மையம்:

### ரூபன் ரவி & விஜயராணி ரூபன்

**துதிக்க:** ஆரவல்லி பிராந்திய சுதேச ஊழியர்களுக்கான பயிற்சிக்கூடுகையை நடத்தவும், அதில் 14 சுதேச ஊழியர்கள் கலந்து கொண்டு பயன்பெறவும் தேவன் கிருபை தந்தார். வியாராவில் வைத்து நடைபெற்ற ஜெபம் மற்றும் ஊழியத்திட்டக்கூடுகையை ஆரவல்லி பகுதி மிஷனெரிகளுக்கும், விடுமுறை வேதாகமப்பள்ளி நடத்துனர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சியை 19 சுதேச ஊழியர்களுக்கும், சில தன்னார்வ ஊழியர்களுக்கும் தேவன் பெருமளவில் ஆசீர்வதித்துத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது LTI பணிமையத்தில் பருவமழைக் காலத்திற்கு முன்பாக செய்து முடிக்கப்பட வேண்டிய மேற்கூரை தளவாடக் கட்டுமானப்பணிகளுக்கான நிதித்தேவைகள் யாவும் சந்திக்கப்பட; சுதேச ஊழியர்களுக்கான FMPB கல்வி யேடுகளின் மொழிப்பெயர்ப்புப்பணி ஒருசில மாதங்களுக்குள் கட்டாயமாக நிறைவடைய; ஆரவல்லி பிராந்தியத்தில் சபை உபதேசியார்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் கிரமமாக நடத்தப்பட ஜெபிப்போம்.

## செலம்பா: ஏசுபாபு & உஷா

**துதிக்க:** தேவன் நெஞ்சு வலியிலிருந்து ரமேஷ்பாயைக் காப்பாற்றினார். தொண்டாவை கிராமத்தில் வைத்து நடைபெறும் நமது ஆலய ஆராதனையில் டோப்னாபைபர் கிராமத்திலிருந்து ஒரு குடும்பம் தவறாமல் வந்து கலந்து கொள்ள தேவன் பாராட்டும் நன்மைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஆராதனையில் வந்து கலந்துகொள்ள எதிர்ப்புக்காட்டும் நமது நலகுந்தா கிராம புதிய விசுவாசி மீனா பேனின் கணவர் மனம் மாற; விவசாயப் பயிர்நிலங்களில் நமது விசுவாசிகளுடைய கைகளின் பிரயாசங்களை தேவன் ஆசீர் வதிக்கவும், வறண்ட காலத்திலும் அவர்கள் விவசாயத்திற்குப் போதுமான நிலத்தடி நீர் அவர்கள் ஆழ்துளைக்கிணற்றில் அற்புதமாகச் சுரந்து வரவும்; சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் மனந்திரும்பி, இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படி தேவன் பலத்த கிரியை செய்ய ஜெபிப்போம்.

## *தீவிர ஜெபத்தில் தேவ வல்லமை!*

*மகாராஷ்டிரா, டெக்கான் பணித்தளம். நமது விசுவாசிகளைத் தீவிரமாக அதிகம் ஜெபிக்கத் தூண்டுவதற்காக 12 மணிநேர தொடர்சங்கிலி உபவாச ஜெபங்களை ஜெபித்துத் திட்டமிட்டுச் செயல்படுத்தினர், அங்குள்ள நமது ஊழியர்கள். ஒரு திருச்சபையினர் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை ஜெபிப்பர். பின்பு இரவு 8 மணி முதல் காலை 8 மணி வரை வேறொரு திருச்சபையினர் ஜெபிப்பர். பகலும் இரவும் விசுவாசிகளோடு இணைந்து நமது ஊழியர்கள் தொடர்ந்து ஜெபிப்பது என்பது சற்று கடின மானதாகவே மனதிற்கு புலப்பட்டது. ஆயினும், பரிசுத்த ஆவியானவரின் தேவ வல்லமையால் அது அற்புதமாகச் சாத்தியமாயிற்று. முடியாதோ என நினைத்து மலைத்த மணித்துளிகளெல்லாம் மிகவும் உற்சாகமாக வல்லமையாக ஜெபிப்பதற்கு ஏதுகரமாயிற்று. கர்த்தரின் வல்லமையான ஜெப நடத்துதலுக்காகக் கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!*

## மே 28 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சாந்தம் டேவிட் போண்டிங்
திருமதி. ஜெயசெல்வி மணிமாறன்
திரு. பப்லு பரசேத், செல்வி. சோனாலி பெபர்தா

### போடேலி: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி ராஜாசிங்

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. கானானியா கிராமத்திலிருந்து புதிதாக 9 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையை நுகர்ந்துள்ளனர். நமது கிருஷ்ணாபுரா விசுவாசி குஷால்பாய் இவ்வருடம் தனது நிலத்தில் சோளப்பயிர் அறுவடையில் மகத்தான விளைச்சலைக் காண கர்த்தர் தயவு காட்டினார். பாம்புக்கடியிலிருந்து இந்திரா பேன் மற்றும் விஷ்வாஸை தேவன் பாதுகாத்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடியா கிராமத்தில் முதல்முறையாக இயேசுவின் நற்செய்தியைக் கேட்டிருப்போர் யாவரும் இரட்சிக்கப்பட; வெல்ஜிபாய், குருஜிபாய், அஸ்வின்பாய் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; புராபாய் என்பவர் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுவதினால், அவர் சாராயம் தயாரிக்கும் தனது தொழிலை விட்டுவிட்டு, இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ஜெத்தாபாய், லாலுபாயின் குடும்பங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

### முக்காடா: நாகராஜன் & திலகவதி

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷ வார்த்தைகள் உதிர்க்கப்பட்டுள்ளன. 20 புதிய குடும்பங்கள் நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்கின்றனர். அதிக வயிற்றுவலியிலிருந்து காரகனையும், பற்பல நோய்களிலிருந்து தங்கதியையும், சரீர பெலவீனத்திலிருந்து அரவிந்தையும், பாம்புக்கடியிலிருந்து மாதவன் மற்றும் கணேஷையும் தேவன் காப்பாற்றி சுகப் படுத்தியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 4 மாதங்களாகத் தூக்கமின்மையினால் கஷ்டப்படும் காசிக்காக; சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து ஜப்ரு கங்காராமையும், வயிற்றுப்புண் பிரச்சனையிலிருந்து தேவாராமையும் தேவன் சுகப்படுத்த; நடுகர் ஆலய வளாக வேலியை நாசப்படுத்திய சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் தங்களது தவறை உணர்ந்து மனந்திரும்ப; பின் மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகளான ரகுநாத், ராம்தாஸ், கணேஷ் ஆகியோரது குடும்பங்கள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர ஜெபிப்போம்.

### தர்ணி:

### டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி

**துதிக்க:** ஜெபத்தின் மூலம் வயிற்றுவலியிலிருந்து சுகம் பெற்றதினால், கோசைகுடா கிராம ஆகாஷ் தனது குடிப்பழக்கத்தைக் கைவிட தேவன் உதவி பாராட்டினார். தரன் மாகு பகுதி அர்ஜுனிற்கு காசநோயிலிருந்து தேவன் அற்புத சுகம் நல்கினார். நமது விசுவாசி கோனவியின் மகள் தனது கணினி பயிற்சிக் கல்வியைச் சிறப்பாக நிறைவு செய்ய கர்த்தர் தந்த ஞானத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாவ்ரா இனமக்கள் வசிக்கும் பகுதிகளில் இருக்கும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் கர்த்தரால் தொடப்பட; பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகளான ஷியாம், பிஜாய், ராஜ்குமார், ராஜேஷ் மற்றும் பகர்தி ஆகியோரின் குடும்பங்கள் அனைத்தும் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கும் கிருபைக்குள் வர; சொந்த குடும்ப நபர்கள் எதிர்க்கின்றதால், தனது விசுவாசத்தில் சிறிதும் தளர்ந்துவிடாதபடி நிற்க தேவன் நமது போரி கிராம விசுவாசி சுசிலாவிற்குத் துணை நிற்க ஜெபிப்போம்.

## மே 29 சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கருணாகர் கர்டா
திருமதி. ஷக்கீனா க்ருபா ரக்ஷனா பரே
திரு. இம்மானுவேல் S

### ஜிம்மலாகட்டா (சிரோன்சா) :

**ஸ்ரீனிவாஸ் லாசரஸ் & சுனிதா**

**துதிக்க:** நடைபெற்ற வெளிசந்திப்பு கூடுகைகளையும், ஊழியப் பின்தொடர் பணிகளையும் தேவன் நிரம்ப ஆசீர்வதித்துக் கொடுத்தார். உமனூர் கிராமத்தில் தேடு வோர் முகாமைக் கிரமமாக நடத்த தேவன் ஒத்தாசை காண்பித்து வருகிறார். சிரா பள்ளி கிராமத்தில் வைத்து நடைபெற்ற ஆவிக்குரிய சுகமளிக்கும் கூட்டத்தில் அதிக மானோர் தங்களது ஆத்துமாவிலும் சரீரத் திலும் சுகம் பெற்றிட தேவன் கிருபை புரிந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோயா கோண்ட், மன்யா கோயா, மடியா & நேதகானி ஆகிய மக்களின சமூகத்தினரிடையே சுவிசேஷம் கடந்துச் செல்ல வாய்ப்புகள் உருவாக; பாண்டு மாதவியின் குடும்பம் கிறிஸ்துவில் வளரவும், அவர்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் தைரியமாய் அறிக்கையிடவும் ஜெபிப்போம்.

### சித்தாரா பிராந்தியம் :

**சஞ்சீப் குமார் & ஸ்வர்ணலதா**

**துதிக்க:** அநேக நாட்களாகச் செய்த உபவாச ஜெபத்தின் வாயிலாக மால்கோன் கிராம சுபாஷ் மனநிலை பாதிப்பிலிருந்து சுகம் பெற்றார். சில மாதங்களாகவே காணாமல் தொலைந்து போயிருந்த மோய்தா கிராம நமது விசுவாசியின் மகள் கங்கா மீண்டும் தன் வீடு திரும்பினார். சாங்வி, பன்னாலி ஆகிய பகுதிகளில் நடந்த பெண்கள் மேளாவை தேவன் ஆசீர்வதித்துத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது பன்னாலி சபை மூப்பர் சுக்லால் மனம் சீர்பட்டு, மீண்டும் நமது சபை ஆராதனையில் வந்து கலந்து கொள்ள; சிவ்தேக்டி, தெம்லா, எண்பூர், சக்லி, கட்டியா ஆகிய கிராமங்களில் இருக்கும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## கர்நாடகா

### கௌரிபித்தனூர்:

**ஃப்ரான்சிஸ் துரைசாமி & ஜெயந்தி**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. ஆபத் தான சிக்கல் நிறைந்த நோயிலிருந்து குழந்தை தீர்ஷாவையும், சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து கிருஷ்ணப்பாவையும், மரணப்படுக்கையிலிருந்து கங்கம்மா வையும் தேவன் முழு ஆரோக்கியமடையச் செய்தார். இப்பணித்தள ஆலயச்சுற்றுச்சுவர் கட்டும்பணியை நிறைவு செய்ய தேவன் உதவி புரிந்தார். களவுசெய்யப்பட்டிருந்த தனது மிதிவண்டியை நஞ்சம்மா மீண்டும் திரும்ப கிடைக்கப் பெற்றமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் யாவரும் கர்த்த ருக்குள் ஆவியிலே பெலன் கொள்ளவும், நமது ஆராதனைகளுக்குத் தவறாமல் வந்து கலந்து கொள்ளவும்; சிவப்பா & கங்கம்மா, ஜோயல் வெங்கடேஷ் & ஜாய்ஸ் ஆகியோரது குடும்ப வாழ்வில் தேவசமா தானம் பிறக்க; நமது விசுவாசிகளான காயத்ரி & ராமமூர்த்தி ஆகியோருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; கடன் பிரச்சனையில் மூழ்கித் தவிக்கும் நமது விசுவாசிகளின் கடன் பிரச்சனைகள் தீர தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

## மே 30 ஞாயிறு

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ரூபன் ரவி, திருமதி. மெர்லின் பிராங்க்ளின்
திருமதி. கிளாடி பியூலா சாமுவேல் ஜெபகுமார்
திரு. இஸ்ரேல் நத்தானியேல் எட்வர்ட் S
திரு. வாவச்சன் M P, திருமதி. உஷா ஏசுபாபு
திருமதி. அஞ்சலிதேவி பாண்ட்டுமிலி அகிபாடா

### நிடகுந்தி: நரேந்திர குமார்

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். ஏறக்குறைய 250 நபர்கள் முதன்முதலாக இயேசுகிறிஸ்துவை அறியும் பொருட்டு, தேவன் இயேசு திரைப் பட ஊழியத்தை நன்கு ஆசீர்வதித்துத் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரேஷ்மா & சந்தோஷ் ஆகியோர் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் நல் வளர்ச்சிக் காண; கிரிஷ்யால் கிராமத்தில் திரையிட்டுக் காட்டப்பட்ட இயேசு திரைப் படத்தைக் கண்டோர் இயேசுகிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ரசாயணப் புகைமூட்டத்தினால் பாதிக்கப்பட்டு பேசக்கூட இயலாமல் தவிக்கும் சர்வேஷிற்கு தேவன் முழுமையான சுகத்தைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

### சூளூர்பேட்டை: ஸ்டீபன் ஜெயசீலன்

**துதிக்க:** ஒரு கிராமம் புதிதாகச் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. போர்தா மடுசா கிராமத்திலிருந்து புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவண்டை விசுவாசத்துடன் நெருங்கியுள்ளனர். எலும்புமூட்டு வலிகளிலிருந்து வாணியையும், மனக் கோளாறிலிருந்து வேதகிரிபாலம் கிராம கோபி சுப்ரமணியனையும், சரீர வலியிலிருந்து ரூத்தம்மாவையும் தேவன் அற்புதமாகக் குணப்படுத்தினார். அநேக நாட்களுக்குப்பின், நமது சுதேச ஊழியருக்கு நல்ல வீடொன்று வாடகைக்குக் கிடைக்க தேவன் உதவிக்கரம் ஈந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிரசாத், விஜய், பேபி ஆகியோருக்குக் குழந்தை பாக்கியங்கள் கிடைக்க; வெங்கடையா, ஜாண் பால், சூசன், சுவாதி, மஞ்சுளா, பாலையா, ராணி, காமேஷ்வரி, ஜான்சி ஆகியோரது இல்லங்களில் தேவசமாதான நதி பெருக்கெடுத்து ஓட; சுப்ரமணியன், முத்தாலய்யா, வெங்கட சுப்பையா, ஸ்ரீனிவாசன், தனார்த்தனன், ரவி, பிரசாத் ஆகியோர் இரட்சிக்கப்பட; புதிய விசுவாசிகளான போர்தா மடுசா கிராம புத்தய்யா, பட்டையா, சின்னையா, நாகேஷ், வாணி, சுரேஷ், காமேஷ்வரி, சிவா, கங்கம்மா ஆகியோரது ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

### *விசுவாசிக்கு விரோதமான மந்திரமில்லை!*

*ஜார்க்கண்ட், லால்மட்டியா பணித்தளம், மிரி சோரேன், இவர் மாத்திரமே இவரது குடும்பத்தில் விசுவாசி. எனவே, இவரது மாமியார் இவருக்கு விரோதமாக மந்திரம் மூலம் செயல்பட்டார். மிரி சோரேன் நமது ஜெபக்கூட்டங்களுக்கு வரும் சமயத்தில், இவருடைய வாய் ஜெபிப்பதற்கு இயலாமல் எப்பொழுதும் அடைக்கப்பட்டதாகவே இருக்கும். இதனைக் கண்ட நமது பிற விசுவாசிகள் அனைவரும் இவருக்காக அதிகம் ஜெபித்தனர். அதன் விளைவு மந்திரக்கட்டு நொறுக்கப்பட்டு, இவருடைய வாய் ஆண்டவர் இயேசுவைத் துதிக்க வெகுவாய்த் திறந்தது. விபரீதம் நடக்கும் என இவரது வீட்டு விரோதிகள் காத்திருந்தனர். ஆனால், கர்த்தரோ இவரைத் தமது செட்டைகளின் மறைவிலே பாதுகாத்து, நாள்தோறும் இவர் தம்மில் வளர்ந்து வர கிருபை புரிகிறார். அல்லேலூயா!*

மே
31
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சந்திரன் K V, திரு. விஜயன் T
திரு. அருள் ஆசீர் D, திருமதி. சுவாதி ஷர்மா
திருமதி. சந்தானி பர்தன் மனோஜ்குமார் பானி

### அனந்தப்பூர் பிராந்தியம்:

**பால் ரவிராஜ் & ஹேமலதா**

**துதிக்க:** புதிதாக 11 கிராமங்களில் சுவிசேஷ வார்த்தைகள் உதிர்க்கப்பட்டுள்ளன. புதிதாக 9 நபர்கள் இயேசுவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். 4 இடங்களில் நடந்த தேடுவோர் முகாம்களை தேவன் ஆசீர் வதித்துத் தந்தார். மதுரபள்ளி கிராம வெங்கட லட்சுமியம்மாவைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். கோத்தசெருவு கிராமத்திலிருந்து அதிகமான புதிய தொடர்பாளர்களைப் பெற்றுக்கொள்ள தேவன் உதவி செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இன்னும் அநேக கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் தைரியமாக நமது விசுவாசிகள் அறிக்கையிட; நமது வாலிபப்பிள்ளைகள் நன்கு படித்து நல்ல வேலைகளில் அமர தேவன் ஒத்தாசை காட்ட; ரோதம், சில்லமத்தூர் ஆகிய பணித்தளங்களில் ஆலயங்கள் கட்ட நல்ல நிலங்கள் கிடைக்க ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### தேன்கனிக்கோட்டை:

**ஜெபராஜ் & எஸ்தர் தங்கம்**

**துதிக்க:** ஆனந்த், ராஜம்மாள், ஜெயமணி ஆகியோர் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டுகின்றனர். சாத்தனபள்ளி கிராம நமது விசுவாசி பாக்கியாவிற்குச் சுகப்பிரசவத்தை தேவன் கொடுத்தார். சாமுவேல், மேரி காந்தா, மணி ஆகியோர் பெரிய விபத்தி லிருந்து உயிர் தப்பிப் பிழைத்தனர். கஸ்தூரி குடும்பத்தில் தேவன் தமது சமாதானத்தை நிறைவாய்க் கட்டளையிட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒசாஹள்ளி கிராம நஞ்சன்தப்பா காலெலும்பு முறிவிலிருந்தும், மகேந்தர் மூளைக்கட்டியிலிருந்தும், பாரதி பெலவீனத்தி லிருந்தும் பூரண குணமடைய; சிவகுமார் மற்றும் எரம்மாவின் கணவரும் குடிப்பழக்கத் திலிருந்து வெளிவர; நமது விசுவாசிகளின் பிள்ளைகளான சினேகா மற்றும் சந்தோஷ் தங்களது 12-ம் வகுப்புத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற ஜெபிப்போம்.

## கர்த்தரின் பாதத்தைத் தொட்ட கண்ணீர்!

*மத்தியப் பிரதேசம், சிரியா பணித்தளம், தாம் கடா கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசி ஷர்மிளா, தான் கார்கோனுக்குப் பயணப் படும்வேளையில் தனது சொத்திற்கான ஆவணங்கள் மற்றும் அதற்குரிய சான்றிதழ்கள் யாவையும் தொலைத்து விட்டார். இக்கடுமை யான இழப்புக்கு இவர் பிறவிசுவாசிகளுடன் இணைந்து மிகவும் ஊக்கமாகக் கண்ணீரோடு ஜெபிக்கலானார். இவரது கண்ணீர் கர்த்தரின் பாதத்தைச் சென்றடைந்தது. அதன் விளைவு, இவருடைய தொலைந்து போன அனைத்து பத்திரங்களும் ஒரு காவல் அதிகாரியின் கையில் கிடைத்தது. அவர் அதைத் தனது காவல் அலுவலகத்திற்கு எடுத்துச் சென்று, அந்த விசுவாசி வாழ்கின்ற பகுதியைச் சார்ந்த பஞ்சாயத்து தலைவரிடம் அதைக்குறித்து கூறினார். பின்பு நமது விசுவாசி ஷர்மிளாவுக்கு இக்காரியம் அறிவிக்கப்பட்டு, தொலைந்து போன அனைத்து ஆவணங்களையும் அவர் பெற்றுக்கொள்ளும்படி தேவன் கிருபை செய்தார். தனது கண்ணீரின் ஜெபத்திற்குப் பதிலளித்த தேவனுக்கு நன்றியுள்ள இருதயத்தோடு துதி செலுத்தினார், ஷர்மிளா. தேவனுக்கே மகிமை!*

# நிதி அலுவலகத்திலிருந்து

**Online Banking**

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icic**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:** காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

## நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

**Online Fund Transfer**

In google search type: **FMPB SB Collect**

it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***